Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-12 25-04-2005 திங்கட்கிழமை ஓசை 66



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11478)

## சுனாமி நிவாரணத்தில் மோசடி; ஐ.தே.க.ஆர்ப்பாட்டத்திற்கு முஸ்தீபு

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

**சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவதில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட காலி மற்றும் ரத்கம பகுதி மக்களைப் பார்வையிடச் சென்ற ரணில் விக்கிரமசிங்க பொது மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செலவிடப்பட்ட நிதி தொடர்பான உரிய தகவல்கள் வெளியிடப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமூகச் சீர்கேடுகளைக் கண்டித்து மன்னார் வங்காலையில் பேரணி

(மன்னார்)

மன்னார் வங்காலை கிராமத்தில் சமூகச் சீர்கேடுகளைக் கண்டித்து வங்காலை கிராம மக்களால் மாபெரும் கண்டனப் பேரணியொன்று நேற்று நடத்தப்பட்டது.

காலை 7.30 மணியளவில் ஆரம்பமான இப் பேரணிக்கு வங்காலை பங்குத் தந்தை தலைமை வகித்தார். இதன் போது வங்காலை கிராமத்தில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்தல், சட்ட விரோத தொலைக்காட்சி நிலையம் நடத்தல் போன்ற சமூகச் சீர்கேடுகளைக் கண்டித்தே இக் கண்டனப் பேரணி இடம்பெற்றுள்ளது.

வங்காலை புனித அன்னம்மாள் தேவாலயத்திலிருந்து பிரதான வீதியூடாக பேரணி ஆரம்பமாகி கிராமங்களூடாகச் சென்றது பதாதைகள் சகிதம் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் முற்பகல் 10.00 மணியளவில் ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்றது. (18)

## வீரவணக்கம்

நேற்று முன்தினம் தவறுதலான வெடிவிபத்தின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ கப்டன் ரகுமதி / திருமகள் (கமலேந்திரன் யோதிகா - நி.மு. பெருமாள் கோவிலடி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம், த.மு. ரவிகடை, வேப்பம்குளம் முகாம், வவுனியா, வன்னி, த.மு: பிள்ளையார் கோவிலடி, செம்மங்குன்று, பூநகரி மன்னார்) என்ற போராளியே சாவடைந்துள்ளார்.இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சுனாமி பொதுக்கட்டமைப்பினை சர்வதேச சமூகமே வலியுறுத்தியது

### சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு என்ற விடயத்தை வலியுறுத்தியது சர்வதேச சமூகமே அன்றி தமிழீழ விடுதலைப்புலிகள் அல்ல என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார் சுனாமிக்கு பின்னரான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்சமயம் நாடளாவிய ரீதியில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக நேற்று கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் தமிழீழ விடுதலைப்புலிகள் தற்சமயம் தனி அரசை கோரவில்லை. சுயநிர்ணய உரிமை தொடர்பாக பேசவில்லை. அவர்கள் தற்சமயம் சுனாமிக்குப் பின்னர் அழிவுகளை புனரமைக்கும் திட்டம் ஒன்றையே எதிர்பாக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று துப்பாக்கிச் சூடு; ஆலயத்தலைவர் உட்பட 4 பேர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாமாங்கம் பார் வீதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஆனைப்பந்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத்தலைவர் மதி என அழைக்கப்படும் இராசமாணிக்கம் மதியழகன் (வயது 31) உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலை உத்தியோகத்தர் ராஜன் எனப்படும் இராஜரட்ணம் இராஜசேகரம (வயது-42),ரவிச்சந்திரன் சுகன்யா(வயது- 12), ஜெகநாதன் நித்தியானந்தனா (வயது -13) ஆகியோரே இச்சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மற்றையவர்களாவர். நேற்று ஆனைப்பந்தி விநாயகர் ஆலய வருடாந்த தீர்த்த உற்வசவத்தின்போது ஆலயத்திலிருந்து சுவாமி தீர்த்தமாட மாமாங்கம் விநாயகர் ஆலய தீர்த்த குளத்திற்கு சென்று கொண் டிருந்த சமயம் இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த ஏனைய மூவரும் சுவாமி ஊர்வலத்தில் சென்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி பொதுக்கட்டமைப்புக்கு இந்தியா எதிர்ப்பு இல்லை

(கொழும்பு)

சுனாமி பொதுக்கட்டமைப்பு அமைப்புக்கு இந்தியா எதிர்ப்பு இல்லையென அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.யு குணசேகர தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு சுனாமி நிவாரணத்திற்கு குறிப்பிட்ட பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவதன் அவசியத்தை இந்தியா ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, பொதுக்கட்டமைப்புக்கு இந்தியா ஆதரவு வழங்கக்கூடாது என முன்னாள் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரி கேட்டுள்ளார். (32)

## பொதுக்கட்டமைப்பிற்கு பாராளு. அங்கீகாரம் சனாதிபதி சந்திரிகாவிடம் புதிய திட்டம்?

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு யோசனைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவது தொடர்பில் சனாதிபதி புதிய திட்டம் ஒன்று குறித்து ஆராய்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்க் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் பொதுக் கட்டமைப்பு யோசனைகளுக்கு பாராளுமன்ற அங்கீகாரத்தை சனாதிபதி பெறவுள்ளதாகவும் இதன் மூலம் ஜே.வி.பியிற்கு எதிரான தனது கடுமையான நடவடிக்கையினை ஆரம்பிக்க சனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பி விலகினால் அரசாங்கத்தை கலைத்து மீண்டும் ஒரு தேர்தலுக்கு செல்வதற்கும் சனாதிபதி தயாராகிவருவதாக அறிவிக்கப்படுகின்றது.தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் தனது சனாதிபதிப் பதவியினை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவிடம் ஒப்படைத்துவிட்டு பொதுசன

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.யுடன் ஆலோசித்த பின்னரே பொதுக்கட்டமைப்பு உடன்பாடு சந்திரிகா

(லண்டன்)

மக்கள் விடுதலை முன்னணியுடன் கலந்தாலோசித்த பின்னரே பொதுக்கட்டமைப்புக் குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் தற்போது தங்கியுள்ள சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் சோமவன்ச அமரசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டால் மக்கள் விடுதலை

(12ஆம் பக்கம் பார்க்க)



### ஆனையிறவுத்தளம் கைப்பற்றல், தீச்சுவாலை முறியடிப்புச் சமர்

## விடுதலைப்புலிகளின் சமரணிகளுக்கிடையே விளையாட்டு, கலை இலக்கியப் போட்டிகள்

(அலுவலகசெய்தியாளர்)

ஆனையிறவு பெரும் படைத்தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிறைவு நாளும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரை முன்னிட்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமரணிகளுக்கிடையே விளையாட்டு நிகழ்வுகளும் கலை இலக்கியப் போட்டிகளும் வெகுசிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது.

இரண்டாயிரமாம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆனையிறவு இராணுவத்தளம் முற்றாக தாக்கியழிக்கப்பட்டதோடு, அத்தளத்தை மீளக்கைப் பற்றவென தீச்சுவாலை எனும் பெயரில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய படை நடவடிக்கையும் முறியடிக்கப்பட்டது.

இவ்வெற்றிச் சமர்களின் வெற்றிவிழாவினைச் சிறப்பிக்கும் முகமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் சமரணிகளுக்கிடையே மாபெரும் விளை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரத்தில் அழககம் (சலூன்)ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். சம்பளம் பேசித்தீர்மானிக் கப்படும். தொடர்புகளுக்கு:- "பொதிகை அழககம்" கனகபுரம் தெரு, கிளி நொச்சி. (6072)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக் குடன் செய்து கொள்ளவும் போட் டோக் கொப்பி, லெமனேட்டிங் போன் றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தக சாலை கண்டிவீதி, கிளிநொச்சி. T.P.021-2285750. (சி.11598)

2007 A/Lகலை, வர்த்தக பிரிவு வகுப்புக்கள்நடைபெறும் நேரசூசி

| | | |
|---|---|---|
| தமிழ் வகுப்பு:-சனி,<br>திரு.ரமேஸ் | 10-11,(3-4) | ஞாயிறு<br>8-9 |
| புவியியல் வகுப்பு-திங்கள்,புதன்<br>திரு.ஸ்ரீஸ்குமார் | 4-5, | 4-5 |
| இந்துநாகரிகம் வகுப்பு-புதன், ஞாயிறு<br>திரு.சிவஞானம் | 5-6 | 9-11 |
| கணக்கீடு வகுப்பு-திங்கள்<br>திரு.சிவப்பிரகாஸ் | | 4-5 |
| வணிகக்கல்வி வகுப்பு சனி,ஞாயிறு<br>திரு.அகிலன் | 5-6 , | 8-9 |
| பொருளியல்வகுப்பு-திங்கள்,வெள்ளி<br>திரு.சாந்தன் | 4-5 , | 4-5 |

இடம்:-கேம்பிறிஜ் கல்லூரி, நிர்வாகம், உதயநகர் கிளிநொச்சி. (சி.11781)

### காணி விற்பனைக்கு

பரந்தன் முல்லைவீதி, புதுக் குடியிருப்பு தேவிபுரம் சந்தியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் நல்லபலன் தரும் 2 1/2 ஏக்கர் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- (கோடீஸ்வரன் கடை, தேவிபுரமசந்தி)(5834)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

### முட்டைக்கோழி விற்பனைக்கு உண்டு

எம்மிடம் பிறிமா இன முட்டைக் கோழி (சிவப்பு) மூன்று மாதம் நிரம்பியநிலையிலுள்ளது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு:- சுடர், கோழி வளர்ப்பகம்,155 விவேகானந்தநகர், கிளிநொச்சி. (5917)

### சீமெந்துக்கல் விற்பனைக்கு உண்டு

எம்மிடம் தரமானசீமெந்து, மணல் கலவையில் தரமான முறை யில் அறுக்கப்பட்ட சீமெந்துக்கல் விற் பனைக்குண்டு.அளவு-4"x6"x12." தொடர்புகளுக்கு:- தமிழ்கடல்,கட்டடப் பொருள் வாணிபம்,155 யாழ்.சாலை, கிளிநொச்சி. (5916)


# எமது தேசியம்,பாரம் பாரியத்தை பாதுகாத்து உரிமைகளை வென்றெடுக்க பாடுபடுவோம்

## –கிளி,வெகுசன அமைப்புக்கள் ஒன்றியம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நாம் ஒரு தேசிய இனம். எமக் கென்று ஒரு பாரம்பரியம் உண்டு இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் தேசத்திற்கு எதிராக போராடும் நாம் தொழிலாளர் தினத்தை எம் உரிமையை வென்றெடுக்க எம் உரிமைக்கான நாளாக கருதிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இவ்வாறு கிளிநொச்சி பிரதேச வெகுசன அமைப்புக்களின் ஒன்றி யம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மேதினத்தை முன் னிட்டு ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மேநாள் உரிமைகளை வெற்றி கொண்ட நாள், முதலாளி வர்க்கத் தால் நசுக்கப்பட்ட தொழிலாளர், தம் தொழிலை, தொழிலாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முதலாளி வர்க்கத்தை ஆக்கிய தன் எதிரொலிதான் இன்று உலகத்தொழிலாளர் தம் உரிமை கள் வென்ற நாளாக கொண்டாடு கிறார்கள். வர்க்க ரீதியாக ஒன்று பட முனையும் வர்க்கங்கள் இன ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் வேறுபடுத்தி நசுக்குகின்றமை தான் இன்றைய உலக ஒழுங்காகி விட்டது.

தேசிய விடுதலைக்காக எம் போராட்டமானது ஆரம்பிக்கப்பட் டது. நாம் இனரீதியாகவும், தேசிய ரீதியாகவும், ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டு ஏதிலிகளாக வாழ்ந்த நிலையில்தான் இந்நிலை இன் றும் தொடர்கிறது. எம் போராட்டம் ஆயுத போராட்டமாக பரிணாமம் பெற்றுக் கூர்மை அடைந்த நேரத் தில் சர்வதேசங்களின் ஆலோச னையில், ஆயுதப் போராட்டத்தை சற்று நிறுத்தி, சாமாதான வழியில் சமாதானச்சூழலை தோற்றுவித்து அந்த நிலையில் எம் உரிமையை பாதுகாக்கக்கூடிய நிலையில் அமையும் என்ற நம்பிக்கையில் அச்சூழலை பாதுகாத்துக் கொள் கிறோம்.

இச்சூழல் நிலையானதாக இருக்க விரும்பிய சர்வதேச சமூகத்திடம் எமக்கு ஏற்ற ஒரு இடைக்கால நிர்வாக அலகினை உருவாக்கி எமது உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக் கையை எமக்கு ஏற்படுத்தும் என எதிர்பார்த்தோம் எத்தகைய சர் வதேச அழுத்தங்களுக்கும் அடி பணியமறுக்கும் சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் இச்சமாதான சூழலில் ஓர் இடைக்காலத் தீர்வை ஏற்படுத்தாது என்ற நிலை தோற்றுவிக்கப்படுகின்றது.

எனவே எமது உரிமை பாது காக்கப்பட வேண்டுமாயின் எமது உரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டுமாயின் மே நாளினை எமது உரிமைக்கான நாளாகவே நாம் கருதுவோம் எம் உரிமையை வென்றெடுப்பதற்கு மீண்டும் எம் மைப் போராட்டத்துள் தள்ள வேண்டாம் என்பதை சர்வதேச சமூகத்திடம் நாம் ஒன்றுபட்டு வேண்டுகோள் விடுக்கிறோம்.

நாம் எமது உரிமையுடன் சமாதானமாக ஒன்றுபட்ட மக்க ளாக வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கும் ஒவ்வொருவருக் கும் எமது உரிமைகளை மதித்து எம் பிரதேசத்திற்காக இடைக்கால நிர்வாக அலகினை தமிழீழ விடு தலைப் புலிகளிடம் கையளிக்க உதவுமாறு ஒன்றுபட்ட குரலாக கேட்டுக்கொள்கின்றோம் என அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பாண்டியன்குளம் பிரதேசத்திற்கு உலக வங்கி பிரதிநிதிகள் விஜயம்

(மல்லாவி)

முல்லை மாவட்ட பாண்டியன் குளம் பிரதேச செயலர் பிரிவுக்



குட்பட்ட நியாப் திட்டத்தின் வேலைகளுக்கு தெரிவு செய்யப் பட்ட கிராமமான கொல்ல விளாங்குளம் கிராமத்திற்கு உலக வங்கி பிரதிநிதிகள் வருகை தந்து நியாப் வேலைத்திட்டங்களை ஆராய்ந்து மக்களின் கருத்துக் களை கேட்டறிந்தனர்.

கொல்லவிளாங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நீர்ப்பாசன பிரதித்திட்டப் பணிப்பாளர் எந்திரி சிவகுமார் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ் வில் உலக வங்கி ஆராய்வுப் பிரிவுக் குழுவைச் சேர்ந்த செல்வி ஜஷிகா, தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதி செல்வராசா, கொழும்பு பிரதிநிதி மனோகரன் ஆகியோ ருடன் வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் வ.தவக்குமார், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ம.ஜெகு ஆகியோர் கலந்து கொண டனர். அத்துடன் நியாப் திட்டத்திற் கான வேலைகளை ஆராய்ந்து செயற்படுத்த மக்களை இருபிரி வுகளாகப் பிரிந்து கருத்துக்களைக் கேட்டனர். பின்னர் துணுக்காய் பிரதேசத்திற்குச் சென்று நியாப் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பொது நோக்கு மண்டபம், குளங் கள் கமவீதிகள் என்பனவற்றைப் பா வையிட்டுச் சென்றனர். (24)

# உருத்திரபுரம் பிரதேசத்திற்கான தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பிரதேசத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று 3.00 மணிக்கு உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் தேசிய எழுச் சிப் பேரவைச் செயலாளர் அருந் தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

புதிய செயலாளராக இ.பரஞ் சோதி ஆசிரியர், துணைச் செய லாளராக ம.நிக்லஸ், பொருளாள ராக அ.விக்னராஜா ஆகியோரும் உறுப்பினர்களாக இ.இராமச் சந்திரன், வரப்பிரகாசம் சிவநேசன் கணேசதாசன், கந்தசாமி, அருட் குமார், இந்திராணி, அகிலா, அன்ரன் ஆகியோருடன் ஆலோ சகராக அருந்தமிழ்ச்செல்வன் தெரிவு செய்யப்பட்டார். இதில் கருத்துரைகளை உருத்திரபுரம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ஜெகன், கிளிநொச்சிப் பிரதேச பொறுப்பாளர் போர்ப்பிரியன், கிளி.பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் நேசன் மேதின நிகழ்வு ஏற்பாட்டுத் தலைவர் நாதன் ஆகியோர் கருத்துரை களை வழங்கினர்.

இக்கூட்டத்தில் மேதின ஏற் பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

# துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் வீதிகள் புனரமைக்கப்படவில்லை




(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள், ஐயன் கன் குளம், கொக்காவில் பிரதான வீதிகள் கடந்த பலவருடமாக எவ்வித புனரமைப்புப் பணிகள் இன்றி பாரிய குன்று குழிகளாக இருந்து வருவதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பிரதேச கிராமங்களில் 800 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. விவசாயத் தொழிலை மேற்கொண்டு உற்பத்திப் பொருட் களை விற்பனை செய்யவும் 25 மைல் தூரம் கொண்ட கிளி நொச்சி நகருக்கும், 18 மைல் தூரம் கொண்ட மல்லாவி நகருக் கும் வரும் மக்கள் ஏனைய இடங் களுக்கு பிரயாணங்களை செய் வோர்கள் எனப் பலரும் பல சிர மங்களை சந்திக்கின்றனர்.

பிரதான வீதிகளில் பற்றைக் காடுகள் சூழ்ந்திருப்பதால் இப்பிர தான வீதிகளில் பாரிய குன்றுகுழி கள் ஏற்பட்டு மழை நீர் நிறைந் துள்ளதாலும், சீரழிந்துள்ளமை யால் நோயாளர்கள், பாடசாலை மாணவர்கள் பயணங்களை மேற் கொள்வோர்கள் எனப் பலரும் அவதியுறுகின்றனர்.

எனவே இப்பிரதான வீதிகளை உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோருகின்றனர். (24)

## முக்கிய மாநாடு

யாழ்.மாவட்டத்தில் அதி கரித்து வரும் வீதிவிபத்துக் களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆரா யும் முக்கிய மாநாடு ஒன்று யாழ்.மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. நாளை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறவுள்ள இம்மாநாட்டில் வீதிப்போக்கு வரத்து நடைமுறைகள் சம்பந்தப் பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளது. (33)


## 7 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மூன்று முறிப்பில் மும் முனைத் தாக்குதலில்

தாயின் மடியில் முத்தாக 24 - 12 - 1979

தமிழீழ மண்ணில் வித்தாக 25 - 04 - 1998



### 2ஆம் லெப்டினன்ட் முத்தப்பன்–கமலநாதன்

கனகராசா (அருமை)
(1 ஆம் வட்டாரம் நெடுந்தீவு மேற்கு)

சம்பவம் :-25-04-1998 அன்று மூன்று முறிப்பு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேரடி மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

கொடும் பகையழித்து விதை குழியில் உறங்குகிறாய்
காலம் சொல்லும் சரித்திரத்தில் கல்மேல் எழுத்தாய்
உன் நாமம்
ஈழம் வெல்லும் நாளினில் இமயத்தில்
உயர்ந்து நிற்பாய்
ஆயிரமாண்டு ஆனாலென்ன அழியாத
உன் நினைவுகளுடன்...

தற்காலிக முகவரி:-
இடது கரை,
3 ஆம் கண்டம்,
முத்தையன் கட்டு.

தகவல்:
அப்பா, அம்மா, அண்ணாமார்,
தம்பிமார், தங்கைமார், சித்தப்பாமார்,
மாமி, மாமாமார்.

## விபச்சாரத்தில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டு; கல்லால் எறிந்து கொல்ல நீதிமன்று தீர்ப்பு

ஆப்கானிஸ்தானில் பெண் ஒருவர் விபச்சாரத்தில் ஈடுபட்டதற்காக கல்லெறிந்து கொல்லும் தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

படக்ஷான் மாநிலத்தில் உருகு என்ற மாவட்டத்திலேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. ஆப்கானிய அரச அதிகாரியொருவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார் இது உள்ளூரிலேயே வழங்கப்படும் மரபு வழி மதச்சார்பு மரண தண்டனை என ஆப்கானின் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தான் சட்டப்படி இது உள்ளூர் நீதிமன்றம் ஒன்றினால் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது; மேற்படி பெண்ணின் கணவன் ஐந்து வருடங்களின் பின்பு அண்மையில் வீடு திரும்பியதாகவும் அவரை விவகாரத்துச் செய்ய அப் பெண் கூறியதாகவும், கணவன் மறுப்புத் தெரிவித்ததாகவும், தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் மேற்படி பெண் வேறொரு ஆணுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும் இவர்களுக்கு குழந்தைகள் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. எனவே தான் இவருக்கு இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும், இம் மாவட்டத்தில் நடைபெறும் இரண்டாவது தண்டனை இது என்றும் தெரிவிக்கப்படுகிறது. தலிபான்களின் ஆட்சியின் போதும் இவ்வாறான தண்டனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் சமூகத்தில் சீர்திருத்தம் வேண்டும் ஜகார்த்தாவில் அதிபர் முஷாரப் தெரிவிப்பு

(ஜகார்த்தா)

"முஸ்லிம் சமுதாயத்தில் நிறைய சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம்" எனப் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார்.




இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசியஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு முஷாரப் பேசுகையில் இஸ்லாம் என்பது அமைதி மற்றும் மிதவாதப் போக்கைக் கொண்டது. முஸ்லிம் சமுதாயத்தில் காணப்படும் சில தவறான கருத்துக்களால் வன்முறைகள் உருவாகின்றன. எனவே முஸ்லிம் சமுதாய நடைமுறைகளில் நிறைய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புத் தேவை இச் சீர்திருத்தத்தின் மூலமே மக்கள்' சமூகம் நல்லிணக்கத்தோடு வாழ முடியும் என்றார்.

## கடற் கொள்ளையர் ஏழு பேர் மலேசியாவில் கைது

(கோலாலம்பூர்)

மலேசியக் கடல் பகுதியில் கொள்ளையடித்து வந்த இந்தோனேசியாவைச் சேர்ந்த ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்கப்பூர் எல்லையில் உள்ள மலேசியாவின் ஜோஹோர் கடற் பகுதியில் அடிக்கடி கடல் கொள்ளை நடந்து வருகிறது. கடந்த 8ஆம் திகதி ஜப்பானிய எண்ணெய்க் கப்பலைத் தாக்கி கொள்ளையர்கள் ஏராளமான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

இதற்கிடையே கடந்த 21ஆம் திகதி சிங்கப்பூர் நீர் இணைப்பு அருகே சுற்றித் திரிந்த ஏழு பேரை மலேசியப் பொலிசார் கைது செய்தனர். இவர்களிடம் விசாரித்ததில் ஏராளமான கடற்கொள்ளையில் ஈடுபட்டது தெரிய வந்ததுள்ளது. தற்போது இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## போதைப்பொருள், ஆயுதக் கடத்தலைத் தடுக்க ஆசிய- ஆபிரிக்க தலைவர்கள் கூட்டாகப் பிரகடனம்

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவில் நடந்த ஆசிய ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் மாநாட்டில் கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்டது. தீவிரவாதத்தையும் போதைப் பொருள் ஆயுதக் கடத்தலைத் தடுக்க கூட்டாக நடவடிக்கை எடுக்கத் தலைவர்கள் உறுதி எடுத்துக்கொண்டனர்.**

மூன்று நாள் மாநாடு நிறைவு பெற்றதையொட்டி கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது, ஆசிய ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு கூட்டாக பாடுபட வேண்டும். தொழில், வர்த்தகம், கலாச்சாரப் பரிமாற்றம் ஆகியவற்றில் வளர்ச்சியைக் காண நடவடிக்கை எடுக்க வேண்டும். வர்த்தக உறவைப் பாதிக்கும் தடைகளை களைய வேண்டும்.

தீவிரவாதத்தை ஒழிக்கவும் போதைப் பொருள் கடத்தல், ஆயுதங்கள் கடத்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த ஆசிய ஆபிரிக்க நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு அந்தக் கூட்டுப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. மாநாட்டுக்கு வந்த சீன அதிபர் ஹூஜிண்டோவோ, ஜப்பான் பிரதமர் ஜூனிச்சிரோ கொய்சூமி ஆகியோரும் தனியாக சந்தித்து பேச்சு நடத்தினார்கள். சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே கடந்த சில நாட்களாக நடந்து வரும் மோதலைத் தடுக்க அவர்கள் சமரசப் பேச்சு நடத்தினார்கள். இதில் இருவருக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டது.

## போதைப்பொருள் கடத்தியவருக்கு வியட்நாம் மரண தண்டனை

ஹெரோயின் போதைப்பொருளை கடத்திய நூயன்வான் சின் (வயது45)னுக்கு வியட்நாம் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

இவரும் மூன்று பெண்களும் வியட்நாமில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு ஹெரோயின் கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டனர். இவர்கள் அனைவருமே அவுஸ்திரேலிய வாழ் வியட்நாமியர்கள். வழக்கை விசாரித்த ஹோசி மின் நகர நீதிமன்றம் நூயன் வான் சின்னுக்கு மரண தண்டனை விதித்தது. மூன்று பெண்களுக்கும் 20 ஆண்டு சிறைத்தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரை விதித்து தீர்ப்பளித்துள்ளதாக அந்நாட்டு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

## புதிய ஆசீர்வாதப்பராக 16ஆவது பெனடிக்ற் தனது பதவியை முறைப்படி ஏற்றுக் கொண்டார்

(வத்திக்கான்)



கத்தோலிக்க திருச்சபையின் புதிய பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட 16ஆம் ஆசீர்வாதப்பர் (பெனடிக்ற்) நேற்று தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றார்.

கடந்த இரண்டாம் திகதி நித்திய இளைப்பாற்றையடைந்த இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு பின் அடுத்ததாக புதிய பாப்பரசராகக் கடந்த செவ்வாய்க்கிழமை 16ஆம் ஆசீர்வாதப்பர் தெரிவானார். அவா நேற்யை தினம் பரிசுத்த பாப்பரசர் எனும் புனித பட்டத்தை முறைப்படி ஏற்றுக் கொண்டார்.

வத்திக்கானில் அமைந்துள்ள புனித பீற்றர் சதுக்கத்தில் தனது முதலாவது சம்பிரதாய பூர்வ திருப்பலியை ஒப்புக் கொடுத்ததன் மூலம் இப் புனித பட்டத்தை அவர் ஏற்றுக் கொண்டார். சுமார் ஐந்து இலட்சம் விசுவாசிகள் கலந்து கொண்ட இந்தத் திருப்பணி நிகழ்வில் பாப்பரசர் குறிப்பிடுகையில்; தனது சித்தத்தையோ அல்லது கருத்துக்களையோ ஈடேற்றுவது தனது திட்டம் இல்லையென அவர் தெரிவித்தார்.

யோசப் ரட்சிங்கர் என்னும் இயற்பெயரைக் கொண்ட 16ஆவது ஆசீர்வாதப்பர் உலகம் முழுவதிலு முள்ள சுமார் 110 கோடிகத் தோலிக்கர்களை வழி நடத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்டிருப்பதுடன் வத்திக்கான் ரோம் நகரின் ஆயர் பொறுப்பையும் ஏற்றுள்ளார்.



வத்திக்கானில் புனித பீற்றர் தேவாலயத்தில் தனது முதலாவது வழிபாட்டு கூட்டத்திற்கு வருகை தந்த புதிய பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்ப (பெனடிக்ற்) ருக்கு கழுத்துப் பட்டி அணிவிக்கப்படுவதையும் நிகழ்வை தரிசிக்க வருகைதந்த லட்சக்கணக்கான பக்தர்களையும் காணலாம்.



திக்கிரிட்டில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி இராணுவ நிலைய இணைப்புத் தளத்திற்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட இரு கார்க்குண்டுத் தாக்குதல்களில் ஏற்பட்ட சிதைவுகளை அவதானிக்கும் அமெரிக்கப் படையினர். இத்தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டதுடன் 23 பேர் படுகாயமடைந்தனர்.

## இரட்டைக் கோபுரம் தகர்ப்பு சதித்திட்டம்; குற்றத்தை ஒப்புக்கொண்டார் தீவிரவாதி

(நியூயோர்க்)

நியூயோர்க் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட அல்ஹைறதா தீவிரவாதி சதித்திட்டக் குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்கா, நியூயோர்க் இரட்டைக் கோபுரம் மீது 2001, செப்ரெம்பர் 11ஆம் திகதி அல்ஹைறதா தீவிரவாதிகள் விமானங்களை மோதித் தகர்த்தனர்.

மூவாயிரம் பேர் கொல்லப்பட்ட இச் சம்பவம் தொடர்பாக பிரான்சைச் சேர்ந்த சகாரியஸ் மோசோய் என்ற அல்ஹைறதா தீவிரவாதி கைது செய்யப்பட்டார். அமெரிக்கா, வெர்ஜினியா மாகாணத்திலுள்ள அலெக் சாண்டிரியா மாவட்ட நீதிமன்றில் கடந்த மூன்று ஆண்டுகளாக வழக்கு விசாரணை நடந்து வந்தது. கடந்த வெள்ளியன்று விசாரணை நடந்த போது சகாரியஸ் மீது ஆறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.


அமெரிக்காவுக்கு எதிராக தீவிரவாதச் செயல், விமானத்தாக்குதல், விமானங்களை அழித்தல், பேரழிவு ஏற்படுத்த விமானத்தை பயன்படுத்துதல், அமெரிக்க அரசு அதிகாரிகள் கொலை. அமெரிக்க அரசு சொத்துகளுக்கு நாசம் விளைவித்தல் ஆகிய சதித்திட்டங்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன. இவற்றில் முதல் நான்கு குற்றச்சாட்டுகள், மரண தண்டனைக்குரிய குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்கிறீர்களா? என்று நீதிபதி கேட்ட போது நான் குற்றவாளி என்று சகாரியஸ் கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குற்றத்தை ஒப்புக் கொள்வதால் எனக்கு மரண தண்டனை கிடைக்கும். ஆனால் அமெரிக்கர்களிடம் நான் எந்தக் கருணையையும் எதிர்பார்க்கவில்லை. விமானங்களைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தும் சதித்திட்டத்துக்காக அமெரிக்காவுக்கு வந்தேன். வெள்ளை மாளிகை மீது விமானத்தை மோதி அழிக்கும் வேலை என்னிடம் தரப்பட்டு இருந்தது. இதற்காக ஒசாமா பின்லேடன் என்னை நேரடியாகத் தெரிவு செய்தார். போயிங் 747 விமானத்தை ஓட்டும் பயிற்சி எனக்கு வழங்கப்பட்டது. நியூயோர்க் இரட்டைக் கோபுரம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருந்து நான் நடத்த இருந்த தாக்குதல் வேறுபட்டது என்றார்.

# ஆனையிறவு வெற்றிவிழாவின் நேற்றைய நிகழ்வில்...











படங்கள் - சசிக்குமார், பிரதீபன்

## மூதூரில் படையினரின் கெடுபிடி குறித்து கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறைப்பாடு!

(திருகோணமலை)

விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள மூதூர் கிழக்கு பிர தேசத்தில் வாழும் மக்கள், இரா ணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியிலிருந்து பற்றரிகளை எடுத்துச் செல் வதற்கோ அல்லது இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பற்றரிகளைக் கொண்டு போவதற்கோ இராணுவத்தினர் தடை விதித்திருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப் பாடு செய்யப் பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் திரு கோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன், திருகோணமலையிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின ருக்கு இம்முறைப்பாட்டை செய் துள்ளனர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் மூதூர் கிழக்கு மக்கள் தங்களின் அன்றாட வாழ்வுத் தேவைக்குரிய பொருட் களை எடுத்துச் செல் வதற்கு விதிக் கப்பட்ட கட்டுப்பாடுகள், தடைகள் நீக்கப்பட்டன. பற்றரிகள் தாராளமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப் பட்டன. இப்போது கட்டைப்பறிச்சான் ஊடாக பற்றரிகளை எடுத்துச் செல் வதற்கு அங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் கடந்த சில தினங் களாக தடைவிதித்துள்ளனர்.

இது குறித்து பொதுமக்கள், விடுதலைப்புலிகள் நிர்வாகத்திற்கு செய்த முறைப்பாட்டை அடுத்து மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பா ளர் எழிலன் இதனை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கவ னத்திற் குக் கொண்டு வந்துள்ளார்.

பற்றரிகளை எடுத்துச் செல்வ தற்கு படையினர் தடைவிதித்துள்ள தால் மூதூர் கிழக்கு மக்கள் வயல் களுக்கு இரவு வேளைகளில் காவல் பணியில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக் கப்படு கிறது. (25)

## நடமாடும் சேவை மூலம் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசச் செயலக காணி அலுவலகத்தினால் நடாத்தப்பெற்ற நடமாடும் சேவை மூலம் தற்காலிக காணி அனுமதிப் பத்திரங்களை நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரமாக மாற்றிக்கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றதில் மாகாணக் காணி அமைச்சினால் ஒரு தொகுதி காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களுக்கு அனுமதி கிடைக்கப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் செ. ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார்.

மேற்படி அனுமதி கிடைக்கப்பெற்ற உதயநகர் கிழக்கு, மேற்கு செல்வாநகர், ஊற்றுப்புலம், அக்கராயன் பகுதி காணி உரிமையாளர்களின் பெயர்ப்பட்டியல்கள் அந்தந்தக் கிராம சேவை அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றவர்களுக்கு எதிர்வரும் 26 ஆம் திகதியன்று காலை 9.00 மணி முதல் 4.00 மணிவரை அந்தந்தக் கிராமங்களில் வைத்து காணி உறுதிப்பத்திரங்களில் கையொப்பம் பெறும் நடவடிக்கை இடம்பெறுவுள்ளது.

உதயநகர் மேற்கு, [illegible] கிராம மக்களுக்கு உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்[illegible] வைத்தும், செல்வாநகர், ஊற்றுப்புலம், கிராம மக்களுக்கு அந்தந்த [illegible]ராம பொது நோக்கு மண்டபத்தில் வைத்தும் அக்கராயன் கிராம மக்களு[illegible] கரைச்சிப் பிரதேச செயலக அக்கராயன் [illegible]பணிமனையில் வைத்து[illegible] கையொப்பங்கள் பெறப்பட்டவுள்ளதெனவும் [illegible]ணி உத்தியோகத்தர் [illegible]தரிவித்துள்ளார். (சோ)

## சுனாமியால் அ[illegible]ற பாடசாலைகளை புனரமைக்க [illegible]டிக்கை இல்லை!

மட்டக்களப்பு அம்பாறைப் பகுதியில் சுனாமி தாக்கி அழிந்த பாட சாலைகளை மீண்டும் கட்டி அமைக் கும் பணி தொடங்கவில்லை என்று அங்குள்ள மக்கள் கவலை தெரிவிக் கின்றார்கள்.

பாடசாலைகளின் இரண்டாம் தவணை அடுத்த புதன் கிழமை ஆரம்பிக்கின்றன. ஆனால் மட்டக் களப்பு அம்பாறைப்பகுதியில் பாதிக் கப்பட்ட நூற்றுக்கும் அதிகமான பாடசாலைகள் திருத்தப்படாமல் இருக்கின்றன என்று அங்குள்ள மக் களைச் சந்தித்துப்பேசிய பி.பி.சியின் மட்டக்களப்பு செய்தியாளர் கூறு கின்றார்.

## வெதுப்பக உற்பத்திப் பொருட்கள் பயிற்சி நிலையம் திறந்துவைப்பு

ஐ.எல்.ஓ நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் பரமன்கிராய் பகுதியில் வெதுப்பக உற்பத்திப் பொருட்கள் பயிற்சி நிலையம் கடந்த 18 ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் பொருண்மிய மதியுரையக கிளிநொச்சி மாவட்ட வெளிக்கள அலுவலர் அ.சிவலிங்கம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து பயிற்சி நிலையப் பெயர்ப் பலகையை பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் மா. சுந்தர மூர்த்தி திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து வெதுப்பக கட்டடத்தை பூநகரி பிரதேச வர்த்தக சங்கத்தலைவர் அவர்கள் திறந்துவைக்க பயிற்றுவிக்கப்பட்ட பயனாளிகளால் கேக் உற்பத்தி தொடர்பான செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து சிறப்புரைகள் ஆரம்பமாகின. பூநகரி பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன் தனது உரையில் வறிய மக்கள் வாழும் இதுபோன்ற பின்தங்கிய கிராமங்களில் இவ்வாறான புதிய தொழில் நுட்பங்களையுடைய பயிற்சி நிலையங்களை அமைப்பதன் மூலம் எமது மக்களுக்கு புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்த முடி யும் எனவும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும் எனவும் கூறியதுடன் இன்னும் பல கருத்துக்களைக் கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து பூநகரி அபிவிருத்தி நிறுவன தலைவர்,பரமன்கிராய் அ.த.க.பாடசாலை அதிபர் பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி, ஆகியோர் உரையாற்றிய பின்னர் வெதுப்பகப் பொருட்கள் விற்பனை ஆரம்ப நிகழ்வாக பொருண்மிய மதியுரையகக் கணக்காளர் சு.நேசநாதன் வழங்க பூநகரி பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து பரமன்கிராய் கிராம அலுவலரின் நன்றியு ரையுடன் மேற்படி நிகழ்வுகள் நிறைவுபெற்றது (46)



கிளி/கண்டாவளை மகாவித்தியாலயத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சிறுவர் பூங்காவை படத்தில் காண்க. (படம். வதனன்)

# 80,000 சிங்களப் படைவீரர்கள் தப்பியுள்ளதை ஒத்துக்கொண்

## பிரிகேடியர் தயா ரத்நாயக்கவிற்கு ஈழத்தமிழர் சார்பில் நன்றி

### யாழ். மாவட்ட பா.உ ஈழவேந்தன் தெரிவிப்பு

"கடந்த 20 ஆண்டுகளில் அதாவது 1983 தொடங்கி 2003ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 80,661 படைவீரர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடியுள்ளனர். அதில் 10, 292 பேர் தற்போது சட்ட பூர்வமான பதவி விலகலையும் பெற்றுச் சென்றுள்ளனர். இப்படையிலிருந்து வெளியேறியவர்கள் பலர் தமது சொந்தப் பிரச்சினை காரணமாகவே கடமைக்குத் திரும்ப முடியாது உள்ளனர். சிலர் திட்டமிட்டுத் தப்பிச் செல்கின்றனர் குற்றச் செயலிலும் ஈடுபடுகின்றனர். இது ஒருபுறம் இராணுவத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதாக நான் ஏற்றுக் கொள்கின்றேன்".

இராணுவத்தின் பரிதாபகரமான இந்நிலையை ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்துள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர். இராணுவத் தளபதி இக்கசப்பான உண்மையை எடுத்துரைத்தற்கு ஈழத்தமிழ் மக்கள் சார்பில் எம் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றோம். இவ்வாறு யாழ். மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர் மா.க ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; கடந்த 22ஆம் திகதி அகிலத்தின் கவனத்தை ஈர்த்த ஆனையிறவுப் போராட்ட வெற்றியை நாம் கொண்டாடினோம். எவன் கையில் ஆனையிறவு உண்டோ அவன் கையில் யாழ்ப்பாணம் இருக்கும் என்று கூறுமளவிற்கு ஆனையிறவு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது இன்று அது எம் கைவசமாகியுள்ளது.

உவகைப் பெருக்குடன் ஆனையிறவு வெற்றியை கொண்டாடிய நாம் அனைத்துச் செய்தி இதழ்களிலும் 80,000 சிங்களப் படை வீரர்கள் இதுவரை தப்பியோடியுள்ளனர் என இராணுவத் தளபதி பகிரங்கமாக எடுத்துக் கூறியதை எண்ணிப் பார்க்கும் போது இரட்டிப்பு மகிழ்ச்சியில் மூழ்கியுள்ளோம்.

இவ்வேளையில் முன்னாள் தலைமை அமைச்சரும் இந்நாள் பதில்பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரம நாயக்கா விடுதலைப்புலிகளுடன் போர் தொடுக்கப்போவதாக அடிக்கடி அச்சுறுத்துவதைப்பார்த்து நாம் அழுவதா சிரிப்பதா எனத்தெரியாது தத்தளிக்கின்றோம்.

நாட்டை வழிநடத்துவோர் வரலாற்றிருந்து பாடம் படித்தல் வேண்டும் ஆனால் வரலாற்றில் இருந்து பாடம் படிக்க மறுப்போர் வரலாற்றில் தாம்பட்டுணர்ந்த துன்பங்களுக்கு மேலும் மேலும் தள்ளப் படுவது உறுதி.

80,000 படையினர் தப்பியோட்டம் என சிங்களப்படைத் தளபதி கூறுகின்ற இவ்வேளையில் தமிழருக்குப் பொதுக் கட்டமைப்பை வழங்கின் தம் பதவியைத் துறப்பதோடு படையையும் நடத்துவோம் என்று பொருளற்ற முறையில் கொக்கரிக்கும் ஜே.வி.பியினர் (மக்கள் விடுதலை முன்னணி) இனியாவது பாடம் படிப்பார்களா அல்லது தம் அழிவை அரவணைக்க ஆயத்தமாவார்களா என்பதை அறிய விரும்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்னி தொழில்நுட்பவியல் நிறுவன செயற்பாடுகள் குறித்து யாழ்.இல் விளக்கம்


(அலுவலக செய்தியாளர்)

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினரால் அதன் செயற்பாடுகள் தொடர்பாக நேற்று யாழ். மத்திய கல்லூரியில் அறிமுகக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

வன்னி தொழில்நுட்ப நிறுவனத்தின் செயற்திறன் மற்றும் தொழிற்பாட்டு அலகுகள் நடைமுறைகள், புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் முறை மற்றும் வன்னி நிறுவனத்தின் நோக்கம் என்பவை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தும்முகமாக நடைபெற்ற இச்செயலமர்வில் நிறுவனத்தின் பதிவாளர் என்.ஏ.சிறிஞானாநந்தன், சி. சில்வெஸ்ரார்,த.சுபாகரன் ஆகியோர் கலந்து கருத்துக்களை வழங்கினர்.

சேவை நோக்குடன் வன்னி தொழில்நுட்ப நிறுவகம் தனது பணியை ஆற்றி வருகின்றது. இந்நிறுவனத்தில் கற்கின்ற மாணவர்களுக்கு ஒருவருக்கு இரண்டரை லட்சம் ரூபா செலவாகின்றது. எனினும் இந்நிறுவனம் மாணவர்களிடம் இருந்து ஒருவருட கற்றை நெறிக்கு பதினைந்தாயிரம் ரூபா மட்டுமே அறவிடுகின்றது. சேவை நோக்குடன் செயற்பட்டு வரும் இந்நிறுவனம் மாணவர்களுக்கு இக்கல்வியின் பெறுமதியை விளக்குவதற்கு ஆர்வமாக கற்பதற்கும் ஊக்கமெடுக்க நிர்ப்பந்திப்பதாகவுமே இத்தொகை அறிவிடப்படுகின்றது.

இந்நிறுவனம் புலம் பெயர்ந்து வாழும் மக்களால் உருவாக்கப்பட்ட சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகம் என்ற அமெரிக்காவில் தலைமைச் செயலகத்தைக் கொண்டியங்கும் ஓர் அரசசார்பற்ற நிறுவனத்தின் முயற்சியேயாகும். இதன் நோக்கம் சர்வதேச தொழில்நுட்பத்திற்கு ஈடாக வடக்கு கிழக்கையும் அபிவிருத்தி செய்வதேயாகும். என்று வன்னி தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பதிவாளர் என்.ஏ. சிறிஞானாந்தன் தெரிவித்தார்.




யாழ்.போதனாவைத்தியசாலையில் நோயாளர் விடுதிகளில் இடமின்றி நோயாளர் நடைபாதையில் பாய்விரித்து தங்கியுள்ளனர்.

## வங்கிச் சேவைகள் கணினி மயப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் யாழ் மேல் தரக்கிளை முற்றிலும் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை இலகுவாக்குவதற்காகவும் துரிதப்படுத்துவதற்காவும் இக்கணினி மயப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இந்தவாரம் முதல் வாடிக்கையாளர்கள் இலங்கை வங் கியின் கணினிமயப்படுத்தப்பட்ட சேவையை பெற்றக் கொள்ளலாம் (33)

## சுனாமியால் பாதிப்புற்றோருக்கு ஆழியவளையில் 295 நிரந்தர வீடுகள் அமைக்க உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியிலுள்ள ஆழியவளைப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 295 நிரந்தர வீடுகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிர்மாணித்துக் கொடுக்கவுள்ளது என யாழ்.அரச செயலகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

உறுதியான கட்டடப்பொருட்களால் இவை அமைக்கப்படுமெனவும் இவ் ஒவ்வொரு வீடுகளும் 500 சதுர அடிபரப்புடையவை எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது (33)

## இராணுவத்தால் வயல் நிலங்கள் ஆக்கிரமிப்பு யாழ்.குடாநாட்டில் நெற்செய்கை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள பெருமளவிலான வயல் நிலங்கள் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி வைக்கப் பட்டிருப்பதால் நெற் பயிர்ச்செய்கை கடந்த 1995 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கடும் வீழ்ச்சி கண்டிருப்பதாக விவசாயத் திணைக்களத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

வயல் நிலங்கள் பலவும் நெற்செய்கைக்கு உதவாத நிலையில் நிலஇயல்புகெட்டு உவர்த்தன்மையடைந்து வருகின்றது. இதுவும் இப் பயிர்ச்செய்கை வீழ்ச்சி காரணமாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் யாழ். குடாநாட்டு விவசாயிகள் மட்டுமன்றி பொது மக்களும் அதிக விலை கொடுத்தே அன்றாட தேவைகளுக்கான அரிசியினைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமையுள்ளது. (33)

## இறுவெட்டு நூலகம் ஒன்று யாழில்.நிறுவ நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இறுவெட்டு (CD) நூலகம் ஒன்று நிறுவப் படவுள்ளதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித்துள்ளார்.

"யுனஸ்கோ" அமைப்பினரது 1.4 மில்லியன் ரூபா செலவில் நிறுவப் படவுள்ள இவ்இறுவெட்டு நூலகம் யாழ்.பொது நூலகத்துடன் இணைந்ததாகச் செயற்படும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

உலகின் நவீன தொழில்நுட்ப வசதிகளுக்கு ஏற்ப யாழ்ப்பாணத் தையும் வளர்ச்சிகாண வைக்கும் நோககில் இது அமைக்கப்படுகிறது. (33)

## தென்மராட்சி - வலிகாமத்தை இணைக்கும் வண்ணாத்திப் பாலம் புனரமைப்பு

(நல்லூர்)

நீண்டகாலமாக திருத்தப்படாது இருந்த வண்ணாத்திப்பாலத்தை திருத்தும் நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுவருகின்றனர்.

தென்மராட்சி-வலிகாமம் பகுதிகளை இணைக்கும் புத்தூருக்கும் மட்டுவிலுக்கும் இடையேயான வீதியிலுள்ள இப்பாலம் உடைந்தமையால் இப்பகுதியிலுள்ள மக்கள் நீண்டகாலமாக பலத்த சிரமங்களின் மத்தியிலேயே பயணம் செல்லும் அவலநிலைமையில் காணப்பட்டனர்.

புதிய பாலம் அமைக்கப்படுவதன் மூலம் நீண்டகாலமாக பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகி வந்த மக்கள் இதில் இருந்து விடுபடக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (41)

## துவிச்சக்கர வண்டி திருட்டைத் தடுக்க மக்கள் விழிப்புடன்இருக்க கோரல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் துவிச் சக்கர வண்டித் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் பொது மக்கள் அனைவரையும் விழிப்புடன் இருக்குமாறு சிறிலங்கா பொலிசார் அறிவுறுத்தியுள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ்.நகரப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டிகள் திருட்டுப் போயுள்ளமை பற்றி தமக்கு கிடைத்துள்ள தகவல்களையும், முறைப்பாடுகளையும் காரணம் காட்டியே பொலிசார் இவ் அறிவுறுத் தலை விடுத்துள்ளனர்.

இதில் குறிப்பாக பூட்டப்படாத நிலையில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகளும் உறுதியான பூட்டுகள் இல்லாத துவிச்சக்கர வண்டிகளுமே அதிகம் திருடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (33)

## காரைநகர் கரையோர மக்கள் குடிநீருக்காக அலைச்சல்!

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் கடற்கரையை அண்டியுள்ள கிணற்று நீர் உப்பு நீர் ஆகியுள்ளது. காரைநகர் கடற்கரையோரங்களில் இருந்த நன்னீர் கிணறுகள் சுனாமியின் பின் உப்பு நீராக மாறியுள்ளது. இதனால் கடற்கரையோர மக்கள் குடிநீர் இன்றி கஷ்ரப்படுகின்றனர்.

குடிநீரை ஒரு மைல் தூரம் சென்று எடுத்து வருவதாக காரைநகர் கடற்கரையோரம் வாழ்கின்ற மக்கள் தெரிவித்தனர். (சு)

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரைகள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களது இரண்டாம் தவணை விரிவுரைகள் அடுத்த மாதம் இரண்டாம் திகதிக்கு பிற்போடப்பட்டிருப்பதாக கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ் நிலை ஆசிரிய மாணவர்களுக்கான இரண்டாம் தவணை விரிவுரைகள் வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.எனினும் இது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக பீடாதிபதி அறிவித்துள்ளார். (33)

# சனாதிபதியின் பொறியில் சிக்கிய ஜே.வி.பி?

**சந்திரிகாவின்** ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணி அரசு அமைக்கும் முன்பு அதாவது கடந்த ஆண்டு ரணிலின் அரசு கலைக்கப்பட முன்பு சந்திரிகாவுக்குப் பல வழிகளிலும் அழுத்தங்களைக் கொடுத்து ஜே.வி.பி.யினரும் ஏனைய கட்சியினரும் ரணிலின் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடச் செய்தனர்.

அப்போது அவர்கள் எழுப்பிய கோஷங்களில் “ பொறுத்தது போதும்” என்பது வலுப்பெற்றிருந்தது. “சனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்க வேண்டும்” “ஊடகத் துறையைப்பொறுப்பேற்க வேண்டும்” “அரசியலமைப்பின் படி நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும்” இவைகளே அன்று கொழும்பில் நடைபெற்ற கோஷங்களாகும்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் முக்கிய பங்கு வகித்தவர் மங்கள சமரவீரவாகும். அதற்குக் காரணம் ஊடகத் துறையையும் பாதுகாப்பு அமைச்சையும் பொறுப்பேற்றால் அரசு கவிழும் என்பதே. அப்போது சந்திரிகாவைத் தூண்டி களைத்துப் போய் பொறுத்தது போதும் என்பதை இவர்கள் உணர்த்தினர்.

அவ்வாறே சந்திரிகாவும் தனது நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தி அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதுடன் இறுதியில் பாராளுமன்றத்தையும் கலைத்து விட்டார். அதன் பிறகு நாட்டின் நன்மையைக் கருதி சந்திரிகா இவ்வாறு செய்தார் என்றும் இதனை சற்று முன்கூட்டியே செய்திருக்கலாம் என்றும் மங்கள சமரவீர போன்றோர் தெரிவித்தனர். அதன் பின்பு பொதுத்தேர்தலும் நடைபெற்று சந்திரிகா அரசும் பதவி ஏற்றது. இப்போதுஅந்த சம்பவங்கள் நடைபெற்று சரியாக ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது.

ஆனால் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இது வரை பொறுத்தது போதும் என சந்திரிகா தெரிவித்துள்ளார். அவர் இவ்வாறு குறிப்பிட்டது யாரை குறிவைத்து என்றால் கூட்டணி அரசின் பெரும் பங்காளியான ஜே.வி.பியினரைக் குறிப்பிட்டாகும்.அவர் அவ்வாறு குறிப்பிடக் காரணம் ஜே.வி.பி தற்போது கூட்டணி அரசுக்குள் நடந்துகொள்ளும் விதமாகும். அதாவது சந்திரிகா மின்சாரசபையையும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் புனரமைப்புச் செய்யப் போவதாகக் கூறுவதையும், சுனாமி புனர்மைப்புப் பணிகளில் விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை உருவாக்க விரும்புவதையும், ஊடகத்துறையில் பதவிமாற்றங்களைச் செய்யவிருப்பதையும் ஜே.வி.பி முற்று முழுதாக எதிர்ப்பதாகும். எனவே சந்திரிகாவின் நிறைவேற்றதிகாரத்தால் இவற்றை செய்யவிடாது தொடர்ந்தும் தடுப்பதால் அவர் பொறுத்தது போதும் என்ற நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்.

பொறுமையை இழந்து அவர் செய்யப் போதுவது என்ன? அதற்காக அவர் சிந்திக்க வேண்டியதில்லை. அவரிடம் இன்றும் நிறைவேற்றதிகாரம் இருக்கின் றது.அவர் இப்போதும் ஊடகத்துறையில் பதவி வகிக்கும் ஜே.வி.பி ஆதரவாளர்களை நீக்கிவிட்டு அல்லது மாற்றிவிட்டு தமக்கு வேண்டியவர்களை நியமிக்கலாம். ஏற்கனவே அதன் பிரதம செயலரை நீக்கிவிட்டு தனது பொறுப்பின் கீழ் ஊடகத்துறையைக் கொண்டு வந்து விட்டார்.

அது மட்டுமன்றி சில அமைச்சுக்களில் பணியாற்றும் ஜே.வி.பி சார்பு உயர் அதிகாரிகள் தொடர்பாக ஆராய ரகசிய புலனாய்வுப் பொலிஸ் பிரிவையும் உருவாக்கியுள்ளார். ஜே.வி.பி.யினரின் எவ்வித எதிர்ப்பையும் கருத்தில் எடுக்காமல் மின்சக்தி எரிபொருள் துறையை தனியார் மயப்படுத்தவும் முயற்சி செய்கிறார். தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இடைக்கால நிர்வாக அலகுக்கு பாதையமைக்கும் வகையில் சுனாமி பொதுக் கட்டமைப்பை உருவாக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இவை பொறுத்தது போதும் என்ற நோக்கில் செய்யும் சில நடவடிக்கைகளாகும்.

2003 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியது நாட்டுக்காக என்றால் இப்போது செய்வதும் செய்யவிரும்புவதும் நாட்டின் நலன் கருதியே.

அவ்வாறாயின் ஜே.வி.பி யின் நிலைப்பாடு என்ன? சனாதிபதி ஏகாதிபத்திய வாதி என்றோ ச்ர்வாதிகாரி என்றோ அவர்கள் கருதலாம். அல்லது அவர் நினைத்தவாறு நடவடிக்கை மேற்கொள்ள முடியாது என்றோ எதையாவது செய்யட்டும் என்று ஓரமாகிவிடுவார்களா என்பதும் தெரியாது. ஆனால் விதைத்தையே அறுவடை செய்யலாம் என்பதே ஜே.வி.பி.யின் தற்போதைய நிலைப்பாடாகும். 2003 ஆம்ஆண்டு நிறைவேற்றதி காரத்தைப் பயன்படுத்தி ஐ.தே.முன்னணி அரசை பதவி கவிழ்க்கச் செய்த சூழ்ச்சி இப்போது ஜே.வி.பிக்கும் ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பியினர் தற்போது அச்சமுற்று காணப்படுகின்றனர். அது வேறொன்றுக்குமல்ல சந்திரிகா அரசைக் கலைத்துவிடுவார் என்பதற்கே.அன்று பெருந்தொகை நிதி விரயமானாலும் பரவாயில்லை பாராளுமன்றைக் கலைத்துத் தேர்தலை நடத்துமாறு ஜே.வி.பி சந்திரிகாவைக் கோரியது. அது போன்று ரணிலும் தேசிய அரசை அமைக்க ஒத்து வரவில்லை என்று காரணம் கூறி சந்திரிகா ரணிலின் அரசைக் கலைத்தார்.

அதே நிலையே இன்றும் ஏற்பட்டுள்ளது. மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றதிலிருந்து பாராளுமன்றைக் கலைத்தது வரையான காலப்பகுதி போன்ற ஒன்றே தற்போதைய அரசின் நிலையும் ஸ்திரமற்று காணப்படுகிறது.




அன்று ரணில் விக்கிரமசிங்க சமர்தானத்தை முன்னெடுத்துச் செல்லவும் அரசாங்கத்தை நடத்தவும் தடையாக இருந்தது சந்திரிகாவின் நிறைவேற்றதிகாரமாகும். இன்று சந்திரிகாவுக்கு தடையாக இருப்பது ஜே.வி.பியாகும். அன்று சந்திரிகா தேசிய அரசாங்கத்தை அமைக்க ரணிலை அழைத்த போது மறுப்புத் தெரிவித்தார் ஏற்பட்ட இழுபறி நிலை இப்போது ஜே.வி.பியுடன் இழுபறிநிலையாகி விட்டது. அவ்வாறான நிலையில் கூட்டணியரசுக்குள் ஜே.வி.பியுடனான முரண்பாடு காரணமாக சந்திரிகாவுக்குத் தெளிவான ஒரு பொருளாதாரக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது. இதனால் அரசாங்கம் மூக்குடைபட்ட நிலையில் இருக்கின்றது.

உப்புள் ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
தமிழில் வடிவேல்

இந்த நிலையில் அரசாங்கத்தைக் கொண்டு செல்ல முடியாது என்ற நோக்கிலேயே பொறுத்தது போதும் என்ற சொல்லை அண்மையில பிரயோகித்துள்ளார்.

மின்சார சபையையும் எரிபொருள் கூட்டுத்தாபனத்தையும் தனியார் மயப்படுத்தத் தவறினால் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் என்பதும் பொதுக்கட்டமைப்பை அங்கிகரிக்காதுவிட்டால் சமாதான முன்னெடுப்புக்கள் பாதிக்கப்படும் என்பதும் சந்திரிகாவின் கருத்தாகும். அதேவேளை இவற்றுக்கு கெதிராக யார் செயற்பட்டாலும் அதனைப் பொருட்படுத்த மாட்டேன் என்றும் சந்திரிகா தெரிவித் துள்ளார்.

அதேவேளை இவற்றோடு முரண்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு ஜே.வி.பி கூட்டணியை விட்டு பிரியுமானால் தனக்கு அரசாங்கத்தைக் கொண்டு நடத்த ஜே.வி.பி இடமளிக்கவில்லை எனக் கூறி நாடு அராஜகப் பாதையில் செல்கின் றது. அதற்கான ஒரே வழி மக்களின் தீர்ப்பைப் பெறுவதெனக் கூறி பொதுத் தேர்தல் ஒன்றை சந்திரிகா நாடுவார். 2003 ஆண்டிலும் அவர் இதனையே செய்தார்.

அவ்வாறு செய்து சந்திரிகா பொதுத் தேர்தலை நடத்த முயன்றால் ஜே.வி.பியின் கதை முடிவுக்கு வந்துவிடும் என ஜே.வி.பியினரும் அச்சத்துடனேயே இருக்கின்றனர். காரணம் சந்திரிகாவின் துணையினாலேயே அவர் களுக்குக கடந்த பொதுத்தேர்தலில் 39 ஆசனங்கள் கிடைத்தன. அவ்வளவு தொகை ஆசனங்கள் இனிக் கிடைக்குமா? என்பது அவர்களுக்குச் சந்தேகமே. அதனால் சந்திரிகா செய்வதை செய்ய அனுமதித்து விட்டு தமது 39 ஆசனங்களையும் பாதுகாக்க வேண்டியதே வழியாகும்.

சந்திரிகாவுக்குத் தேவையாக இருப்பதும் அதுவே. ஆனால் ஜே.வி.பி மக்களைக் குழப்பிவிட்டு தனியார் மயப்படுத்தலையும் பொதுக்கட்டமைப்பை நிராகரிப்பதன் மூலம் இடைக்கால சபை திட்டத்தையும் குழப்பிவிடலாம் என்ற பயமும் சந்திரிகாவுக்கு இல்லாமலில்லை. எனினும் ஜே.வி.விபினரைக் கூட்டணிக்குள் வைத்துக் கொண்டே அவர்களின் எதிர்ப்பை அவர்களாலேயே முறியடித்து அவர்களை தலைகுனியச் செய்வது சந்திரிகாவின் திட்டமாக உள்ளது.

ஆனால் திரிகாவின் வலைக்குள் ஜே.வி.பி னர் அகப்பட்டுவிட்டார்கள் என்பதற்கு உதாரணமாக மின்சார சபை,எரிபொருள் கூட்டுத்தாபனம், என்பவற்றை புனரமைப்புச் செய்வது என்பது தனியார் மயப்படுத்தல் என முன்பு கூறியதை தனியார் மயமாக்கலைக் கைவிட்டு புனரமைப்புச் செய்தல் பரவாயில்லை என்று தெரிவித்திருக்கின்றது.அது போன்றுபொதுக் கட்டமைப்பை வழங்குவதற்கும் இணங்கியிருப்பதாக கதிர்காமர் மூலம் அறிய வருகின்றது.

புனரமைப்பை தனியார் மயமாக்கல் என்று கூறியதும் பொதுக் கட்டமைப்பு இடைக்கால நிர்வாகம் என்று கூறியதும் ஜே.வி.பியே ஆயினும் அவற்றை ஏற்றுக்கொள்ள வைத்திருப்பது சந்திரிகா. எனவே சந்திரிகா ஜே.வி.பியை விழுத்தவும் முடியும் பாதுகாக்கவும் முடியும். இரண்டுக்கும் உட்படுவது ஜே.வி.பியினரே.

# என் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஐ.தே.க-ஜே.வி.பியின் கூட்டுத் தந்திரம்

### -மேல்மாகாண முதல்வர் விசனம்

மேல்மாகாண சபை முதல் அமைச்சரான சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த றெஜினோல்ட் கூரேயுக்கு எதிராக நாளை கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஜே.வி.பி.யினதும் ஐ.தே. கட்சியினதும் கூட்டுத் தந்திரம் என கூரே தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது தமது அரசியல் வாழ்வில் முடிவை ஏற்படுத்தி மேல்மாகாணசபையை தலையில்லாத முண்டமாக்குவதற்கே என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ராவய பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது ஜே.வி.பியினரின் வரலாறு பற்றி தான் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பதால் இந்த சவாலை ஏற்கக் கூடிய ஆன்ம பலமும், நம்பிககையும் இருப்பதாகவும் சோமவன்ச அமரசிங்க பற்றியோ ஜே.வி.பி.யினர் பற்றியோ தான் எச்சரிக்கையாகவே இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# 78 பாடசாலைகள் முற்றாகச் சேதம்


ஆழிப்பேரலை காரணமாக இலங்கையின் கரையோரப் பகுதியின் கல்வி நடவடிக்கைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.102 பாடசாலைகள் பகுதியாக சேதமடைந்துள்ளதுடன் 78 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.80,000 இற்கும் அதிகமான மாணவர்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.சிறிலங்கா அரசாங்கம் இந்தப் பகுதிகளின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் உரிய அக்கறை செலுத்தவில்லை என கல்விச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.(32)

## கடந்த வாரத்தில்

**14.**

➡ ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள அரசாங்க அலுவலகத்தின் வளாகப்பகுதியில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 15 பேர் பலி;20 இற்கும் மேற்பட்டோர் காயம்.

➡ கட்டார் நாட்டு மன்னர் சேக்கலீபா அல்-தானி டில்லி பயணம்.




➡ இந்தியா-அமெரிக்கா இடையே வீதிக்கட்டமைப்பு மற்றும் கப்பல் போக்குவரத்து தொழில்நுட்ப பரிமாற்றத் திற்கான இரண்டு ஒப்பந்தங்களில் இந்தியாவும், அமெரிக்காவும் கைச்சாத்திட்டுள்ளன.

**15.**

➡ பிரான்சின் தலைநகர் பரிசில் உல்லாச விடுதி ஒன்றில் ஆறாவது மாடியில் ஏற்பட்டதீ விபத்தில் 20 பேர் உடல் கருகிப்பலி; 50இற்கும் அதிகமானோர் காயம்.

**16.**

➡ பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ்முஷாரப் மூன்று நாள் சுற்றுப்பயணமாக இந்தியாவிற்கு விஜயம்.




➡ லெபனானின் புதிய பிரதமராக சிரிய ஆதரவு தொழிலதிபர் நஜீப் மிகாட்டி நியமிக்கப்பட்டார்.


➡ இந்தோனேஷியா நியாஸ்தீவில் பூகம்பம் ஏற்பட்டதால் மக்கள் பயத்தின் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டுவெளியேறினர்.

➡ அமெரிக்காவின் தென்கலிபோர்னியா மாநிலத்தில் நில அதிர்வு ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.1 புள்ளியாகப் பதிவானது.

➡ ஈராக்கின் மிகப்பெரிய சிறைச் சாலையான பக்கா சிறைச்சாலையில் இருந்து பதினொரு சிறைக்கைதிகள் தப்பியோட்டம். தீவிரதேடுதலின் பின் 10 பேர் மீண்டும் கைது.

**17.**

➡ கொலம்பியாவின் தென்மேற்கு நகரான டோரிபியோவில் இராணுவத்தினருக்கும் கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் 20 பேர் பலி.






**14.04.2005-20.04.2005**

➡ இந்து சமுத்திரத்தின் மிகப்பெரிய தீவான கொமோரோஸ் தீவில் எரிமலையொன்று சாம்பலை வெளித்தள்ளியதன் காரணமாக நூற்றுக்கும் அதிகமான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

➡ இந்தியாவிற்கு வருகை தந்த பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்திய சிவசேனைக் கட்சித் தொண்டர்கள் 150 பேர் பொலிசாரால் கைது.

➡ சிறையில் இருந்த கொசாவோ நாட்டின் முன்னாள் பிரதமர் ரமுஷ்ஹரகினாஜ் சிறையிலிருந்து தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டார்.

➡ ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் நொகுடாகா மச்சி மூரா சீனத்தலைநகர் பெய்ஜிங்கிற்கு விஜயம்.

**18.**

➡ ஈரானியப் புரட்சித்தலைவர் அயதுல்லா கொமெய்னியின் நினைவு நாள் ஈரானில் அனுஷ்டிப்பு.



➡ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்,பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ்முஷாரப் ஆகியோர் 17 அம்சக் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டனர்.

➡ பங்களாதேஷிலிருந்து சட்டவிரோதமாக கிறிஸ்நாட்டுக்கு படகுமூலம்செல்ல முயன்ற நூறுபேரை பங்களாதேஷ் கடற்படையினர் கைது செய்தனர்.

➡ இந்தோனேஷியாவின் அருகிலுள்ள சுமாத்திரா தீவில்சக்திவாய்ந்த இரு நில அதிர்வுகள் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.7 புள்ளியாக பதிவானது.

➡ டோஹாவில் நடைபெறவிருக்கும் தேர்தலை முன்னிட்டுஆளுங்கட்சிக்குஎதிராக ஏனைய அரசியல் கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் 7பேர் பலி;150 பேர் காயம்.

➡ சென்னை மாநகராட்சி இடைத் தேர்தலில் அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்தினர் கள்ளவாக்குபோட்டதைக் கண்டித்து வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 2000பேர் பொலிசாரால் கைது.

➡ நேபாளத்தின் கிழக்கு மாகாணமான ரொல்பாவில் அரச படையினருக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு மிடையிலேற்பட்டமோதலில் 22 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பலி.

**19.**

➡ உலக கத்தோலிக்க தலைவராக வர்ணிக்கப்பட்ட பாப்பரசர் இரண்டாம் ஜோன்போல் காலமானதையடுத்து புதிய பாப்பரசராக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த யோசெப் ரட்சிங்கர் (வயது-78) தேர்வு செய்யப்பட்டார். இத்தேர்வு வத்திக்கான் சிஸ்ரின் தேவாலயத்தில் இடம்பெற்றது. இவர் 26ஆவதுபாப்பரசர் ஆவார். இவரது மரபு வழிப் பெயர் பதினாறாவது பெனடிற் என அறிவிக்கப்பட்டுள்ளது.



➡ ஈராக்கின்தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க ரோந்துப் படையணியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில்இருவர் கொல்லப்பட்டதுடன், ஐவர் காயமடைந்தனர்.



**20.**

➡ ஈரானில் தலைநகர் தெஹ்ரானிலுள்ள மெஹ்ராபாத் விமான நிலையத்தில் இராணுவத்திற்குச் சொந்தமான சஹா ஏர்லைன்ஸ் விமானம்தரையிறங்கும் போது தீப்பற்றியதில் 50 பேர் பலி ;பலர் படுகாயம்.

➡ இந்தியாவின்ஆந்திரப்பிரதேசத்தில் பட்டாசு வெடித்ததில் 10 பேர் பலி.

➡ தென் ஜப்பானில் சக்தி வாய்ந்த நில அதிர்வொன்று ஏற்பட்டது. இதன்போது 13 பேர் காயமடைந்தனர். பல கட்டடங்கள் சேதமடைந்தன.ரிச்டர் அளவு கோலில்5.8 புள்ளியாக பதிவானது.

# ஆசிய பிராந்தியத்தில் அடுத்த ஆண்டில் ஆழிப்பேரலை எச்சரிக்கை மையம்

(கொழும்பு)

ஆசிய பிராந்தியத்தில் ஆழிப் பேரலை எச்சரிக்கை மையம் ஒன்று அடுத்த ஆண்டில் ஏற்படுத்தப் படவுள்ளதாக சிறிலங்காவின் விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்துள்ளார். மொரிசியஸில் ஆழிப்பேரலை அனர்த்தங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் நடைபெற்ற மாநாட்டில் திஸ்ஸ விதாரன கலந்துகொண்டார். இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் மற்றும் ஜப்பான்,பெல்ஜியம், சீனா, பிரான்ஸ், பின்லண்ட், ஜேர்மனி, இத்தாலி, நோர்வே, அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடு களின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டன. ஹவாய் மற்றும் சுமாத்திர தீவுகளில் பொருத்தப்பட வுள்ள எச்சரிக்கை மையங்களில் இருந்தும்,இந்தியாவில் அமைக் கப்படும் எச்சரிக்கை நிலையத்தில் இருந்தும் சிறிலங்கா ஆழிப்பேரலை எச்சரிக்கைகளை பெற்றுக்கொள்ளும் என அமைச்சர் திஸ்ஸ விதாரன தெரிவித்துள்ளார். (32)

# ஏப்ரல் 26 தொடக்கம் மே 02 வரை கல்விக்கான பிரச்சார வாரமாக பிரகடனம்

(கொழும்பு)

கல்விக்கான பிரச்சார வாரமாக பிரிடோ நிறுவனம் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் மே மாதம் இரண்டாம் திகதி வரையிலான காலப் பகுதியை பிரகடனம் செய்துள்ளது.

இதன் போது இலவசப் பாடப்புத்தக விநியோகத்தில் தாமதம் மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் கொடுப்பனவு மறுக்கப் படுதல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளன. மலையகத்தை பொறுத்தவரையில் இலவசப்பாடநூல்கள் உரிய காலத்தில் கிடைப்பதில்லை இதனால் மலையக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது.

இதேவேளை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் நிதிகள் மலையக மாணவர்களுக்கு கிடைப் பதில்லை என்ற அடிப்படையில் இது தொடர்பான விழிப்புணர்வும். இந்த வாரக்காலப்பகுதியில் மேற் கொள்ளப்படவுள்ளதாக பிரிடோ நிறுவனம் அறிவித்துள்ளது. (32)

# 'கடல்வரைந்த ஓவியங்கள்' பார்வைக்கு வைக்கப்பட்டன

(செட்டிகுளம்)

வவுனியா திருமறை 'கலாமன்றம் ஏற்பாடு செய்த கடல் வரைந்த ஓவியங்கள்' என்ற நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. சுனாமி பேரலை தாக்கத்தில் நேரடியாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சென்ற யாழ். திருமறைக்கலாமன்ற மாணவர் களினால் இந்த ஓவியங்கள் வரையப்பட்டு இருந்தது முல்லைத் தீவு மாவட்டத்தின் அழிவுகளை சித்தரிக்கும் ஓவியங்களாகவே இவை பெரும்பாலும்இருந்தது.15வரையி லான ஓவியங்கள் காட்சிக்கு வைக் கப்பட்டு இருந்தது. வவுனியா மாவட்ட அரச அதிபர் சின்னத்தம்பி சண்முகம் நாடா வை வெட்டி ஆரம்பித்து வைத் தார்இந்தநிகழ்வில் வன்னி பாராளு மன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர்,வினோநோகாரதலிங்கம் ஆகியோரும்கலந்துகொண்டனர். (21)

# ஐ.நா. செயலாளர் பதவியில் சந்திரிகா குமாரதுங்கவிற்கும் நாட்டம்?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைக்கான அடுத்த செயலாளர் பதவிக்கு சிறிலங் காவிலிருந்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போட்டியிடலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே, சமாதான செய லகப் பணிப்பாளர் ஜெயந்த தன பாலவின் பெயரை இந்தப் பதவிக்கு பிரேரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே மாற்றுத் தகவலும் வெளியாகியுள்ளது.

இதன் அடிப்படையில் தற் சமயம் இந்தோனேஷியாவுக்கு சென்றுள்ள பிரதமர் உட்பட்ட குழு வினர் அங்கு கூடியுள்ள ஆபிரிக்க ஆசிய நாட்டு தலைவர்களுடன் ஆசிய நாட்டில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவு கோரி வருகின்றனர்.

இதன்போது உத்தரவாதங் கள் எதுவும் வழங்கப்படுமாக இருந்தால் குறிப்பிட்ட உயர்பிர முகரின் பெயர் ஐக்கிய நாடுகள் சபை செயலரின் பதவிக்கு பிரேரிக் கப்படலாமென நம்பப்படுகிறது.

இந்த நிலையில், இதற்கான அறிவிப்பு இன்னும் இரண்டு மாதங் களில் வெளியாகலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. (32)

# படகுகட்டும் தொழில் நிலையம் ஈச்சிலம்பற்றில் அமைக்க ஏற்பாடு

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திருமலை ஈச்சிலம்பற்று பகுதியில் படகுகட்டும் தொழில் நிலையம் ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளது இதன் அடிக்கல் நாட்டு விழா நேற்று மதியம் 12.30 மணிக்கு நடைபெற்றது. முதல் கட்டமாக இப்பிரதேசத்தில் சுனாமி தாக்கத்தால் பாதிக்கப்பட்ட 200 படகுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இப்பிரதேச மீனவர்களின் படகுகள் கட்டிக் கொடுக்கப்படும் எனவும் ஒவ்வொன்றும் ஒரு லட்சத்து 35, ஆயிரம் ரூபா பெறுமதியில் 18அடி நீளம் கொண்டதான படகுகள் தயாரித்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# வடக்கு - கிழக்கு சிறுவர் இல்லங்களின் அபிவிருத்திக்கான வருடாந்த ஒன்றுகூடல்

(திருமலை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் கூடிய நிர்வாக அனுசரணையின் கீழ் பராமரிக் கப்பட்டுவரும் வடக்கு - கிழக்கு சிறுவர் இல்லங்களின் புனரமைப் புக்கும் அபிவிருத்திக்குமான நிறுவகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் திருகோணமலை அன்பு சிறுவர் இல்லத்தில் இடம் பெற்றுள்ளது.

நிறுவகத்தின் தலைவர் வணக் கத்திற்குரிய பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் இந்த ஒன்று கூடல் இடம்பெற்றுள்ளது. திருகோணமலை மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் இரா .சம்பந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் நலன் திட்டப் பணிப்பாளர் ரவி, வடக்கு- கிழக்கிலுள்ள அந்தந் தச் சிறுவர் இல்லங்களின் நிர்வாக இயக்குனர்கள், திட்ட இணைப்பா ளர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

முதலாவது நிகழ்வாக சிறுவர் இல் லங்களின் புனரமைப்பிற்கும், அபி விருத்திக்குமான நிறுவகத்தின் நிர் வாகத் தெரிவு இடம்பெற்றது. அனை வரது ஏககோபித்த வேண்டுகோளுக் கமைய அதே நிர்வாகக் கட்ட மைப்பே மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இதனைத் தொடர்ந்து சிறுவர் இல்லங்களின் புனரமைப்பு, அபி விருத்தி தொடர்பாகவும், எதிர்காலத் தில் முன்னெடுக்கப்படவேண்டிய வேலைத்திட்டச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கருத்துப் பரிமாற் றங்கள் இடம்பெற்றன.

# உலக வங்கி நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகள் பொதுமக்களிடம் கையளிப்பு

மன்னார் அடம்பன் பிரதேசத்திலுள்ள சொர்ண பூமியின் வலயம் ஐந்து என்ற கிராமத்தில் 49 வீடுகள் மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் தமிழ், முஸ்லிம் மக்களுக்குக் கையளிக்கப்பட்டன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் அமைத்து வழங்கப்பட்ட இவ் வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வுக்கான பொதுச் சுடரை மாவீரர் கரு ணாவின் தாயாரான இராசம்மா ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியினை அடம்பன் பிரதேசப் பொறுப்பாளர் வசந்தன் ஏற்றி வைத்தார். மங்கல விளக்கினை மன்னார் மாவட்ட அரச அதிபர் தி.விசுவலிங்கம் ஏற்றினார். இந்த நிகழ்வுக்கு மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பாளர் தலைமை வகித்தார்.

வீடுகளை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தமிழர் புனர்வாழ்வுக் கழக பதில் பணிப்பாளர் கேசவராசா ஆகியோர் உரியவர்களிடம் கைய ளித்தனர்.

(18)

-வடக்கு,கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் -

# சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒருதொகுதி வீடுகளை மீள நிர்மாணிக்க உலக வங்கி நிதியுதவி

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வீடுகளின் ஒரு தொகுதியை மீள நிர்மாணிக்கும் பணியினை, வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் உலக வங்கியின் நிதி யுதவியுடன் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கான அங்கீகாரத்தினை நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சும், தேசத்தினை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயல ணியும் வழங்கியுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணத்தின் குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள பிரதேச செய லக பிரிவுகளில் சுனாமிப் பேரலை யால் பாதிப்படைந்தும், கடலோரப் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ளதுமான 15,984 வீடுகளே இத் திட்டத்தின் மூலம் பயனாளிகளின் பங்களிப்புடன் மீள் நிர்மாணம் செய் யப்படவுள்ளன. இதன் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் திருக் கோவில், பொத்துவில், அக்கரைப் பற்று, அட்டாளைச்சேனை, ஆலைய டிவேம்பு, நிந்தவூர் பிரதேசத்தி லுள்ள வீடுகளும், மட்டக்களப்பு மாவட்டத் தில் மண்முனை தெற்கு, ஏறாவூர் பற்று, கோறளைப்பற்று வடக்கு, திருகோணமலை மாவட்டத் தில் மூதூர், கிண்ணியா,பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத் தில் கரைதுறைப்பற்று பிரதேச செய லகப் பிரிவு வீடுகளும், யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலகம் விடுவிக்கப்பட்ட பிரதேச வீடுகளும் மீள நிர்மாணிக்கப்பட வுள்ளன. தேசத்தினை மீளக் கட்டி யெழுப்புவதற்கான செயலணியின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட அர சாங்க அதிபர்களின் சிபார்சின் பேரில் இவ்வீடுகள் மீள நிர்மாணம் செய் வதற்கு வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றது. இம் மாவட்டங்களில் சுனாமி பேர லையால் பாதிக்கப்பட்ட 3610 வீடு களை இவ்வருடத்திலும் ஏனைய வீடுகளை தொடர்ந்துவரும் வருடங் களிலும் மீள நிர்மாணம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின் றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரைச்சிக் குடியிருப்புப் பகுதியில் முல்லை. ம.வி. நிரந்தரமாக இயங்கும் விசேட கூட்டத்தில் முடிவு

(முல்லை)

சுனாமியால் முற்றாக அழிந்த முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தை அதற்கென தற்போது ஒதுக்கப்பட் டுள்ள காணியில் புதிதாக நிர் மாணிப்பதற்கான சிறப்புக் கலந்து ரையால் பாடசாலை தற்காலிகமாக இயங்கிவரும் இடத்தில் அதிபர் அல்பிரட் தலைமையில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் முக்கிய விடயமாக சுனாமியால் அழிந்த இப்பாடசாலை யைக் கரைச்சிக் குடியிருப்புப் பகுதியில் நிரந்தரமாக அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் முல்லை மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை, முல்லை மாவட்ட பொறுப்பாளர் முரளி, கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன், தமிழீழ கல்விக்கழக முல்லை மாவட்ட பொறுப்பாளர், முல்லை பங்குத் தந்தை, முல்லை மாவட்ட கடற் றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர்.முல்லைகாவல் பணிமனைப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித் தனர்.

(20)

## 50 பேர் மீது நடவழிக்கை

(செட்டிகுளம்)

வீடுகளுக்கு சட்டவிரோத மின்சாரத்தைப் பாவித்ததாக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட 50 பேருக்கு எதிரான வழக்குகளில் தண்டப் பணமும், நட்டஈடும் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப் பட்டது சட்டவிரோத மின்சாரம் காரணமாக அநி யாய மரணங்கள் ஏற்படுவதைத் தடுப் பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி உத்தரவிட்ட பத்து மணி நேரத்தில் சட்டவிரோத மின்சாரம் எடுக்க முயன்ற 20 வயது இளை ஞன் ஒருவர் வவுனியா தாண்டிக் குளம் பகுதியில் மின்சாரம் தாக்கி மரணமாகியதாக பொலிசார் தெரிவித் தனர்.

இச்சம்பவத்தில் தம்பிராசா தனரூபன் என்பவரே மரணமாகியுள்ள தாக அடயாளம் காணப்பட்டுள்ளது. மின்கம்பம் ஒன்றிலிருந்து மின்சாரம் பெற முயன்றபோது இவர் மரணமா கியதாக பொலிசார் தெரிவித்தனர்.

(21)


## அறிவித்தல்

## தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளையிலாவது 30.09.2003 ஆம் நாளுக்கு முன்னர் (01வருடகால அடகுக்கடன் சேவை), 30.06.2004 ஆம் நாளுக்கு முன்னர் (06 மாதகால அடகுக் கடன் சேவை) அடகுக்கடனைப் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச்செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடகு நகைகளை தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. எனவே உரியவர்கள் 04.05.2005 ஆம் நாளுக்கு முன்னர் அடகு நகைகளை மீட்டுக்கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.11805)



## மொழிபெயர்ப்பாளர் தேவை

ஆங்கிலத்தை தமிழிலும், தமிழை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கக்கூடியவர் தேவை. தகைமையுடையோர் கீழ் தெரிவிக்கும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். சம்பளம் தகைமைக்கமைய வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
ஆளணி நிர்வாகப் ... ரி,
தமிழர் புனர்வாழ்வுக ... ம்,
கந்தசாமிகோவில் அரு ... மை,
கிளிநொச்சி.

பணிப்பாளர்
ஊடகத்துறை

(சி-11810)


## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
12 - 09 - 1981



தாயக மண்ணில்
25 - 04 - 2001

## ௨ ஆம் லெப். கலைமதி
## சின்னத்தம்பி – ஜெயச்சந்திரவதனி

*தீச்சுவாலை –01 நடவடிக்கையின்போது வீரச்சாவு*

தங்கத்தலைவன் சேனை இணைந்து
தேசம் மீட்கும் புனிதப்போரில்
பகைவன்தொடுத்த தீச்சுவாலை தனை
முறியடித்து தேசத்தாயின் மடியில்
முகம் புதைத்து எமைவிட்டுப் பிரிந்த
கலைமதியே என்றும் உம் நினைவுடன்
பணிமுடிக்க விரைகின்றோம்.

25.04.2001 அன்று இதேநாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இதேநாளில் நினைவு கூருகின்றோம்.


நி.மு. அச்சுவேலி
யாழ்ப்பாணம்,
த.மு. வள்ளிபுனம்
புதுக்குடியிருப்பு.

தகவல்:
சகோதரன்
சி.கலைவாணன்
(போராளி)

(5835)

## 4ஆம் ஆண்டு நினைவில்

தாயின் மடியில்
24 - 12 - 1983



தாயக மண்ணில்
25 - 04 - 2001


## ௨ ஆம் லெப். விஜிதா
## கணபதிப்பிள்ளை-புஸ்பநிதி (கிருசா)


நட்டாங்கண்டல்

தாய் மண் விடுதலையை நெஞ்சினில் சுமந்து
வீரத்தோடு களம் பல கண்டு - நீ
தீச்சுவாலையில் தாய் மண்ணை முத்தமிட்டு
நான்காண்டுகள் சென்றாலும் - உன்
நினைவுகள் எம்மை விட்டு நீங்காது

தகவல்:
குடும்பத்தினர்,
நட்டாங்கண்டல்

(சி-11795)


ஞானேந்திராவுடன் மன்மோகன் சிங்..


மகிந்த ராஜபக்ஷவுடன் மன்மோகன்சிங்..

# நேபாளத்திற்கு மீண்டும் இராணுவ உதவி ஞானேந்திராவிடம் மன்மோகன்சிங் உறுதி

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் இடம் பெற்றுவரும் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நேபாள மன்னர் ஞானேந்திராவை சந்தித்துப் பேசினார். அப்போது நேபாளத்திற்கு மீண்டும் இராணுவ உதவி வழங்கப்படும் என மன்மோகன் சிங் நேபாள மன்னர் ஞானேந்திராவிடம் தெரிவித்தார்.


நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் நேபாள மன்னர் ஞானேந்திராவுடன் மன்மோகன்சிங் 40 நிமிடம பேச்சுவார்த்தை நடத்தினார் நேபாளத்தில் பிரதமர் ஷேர் பதுதூர்தூபா ஆட்சி கவிழ்க்கப்பட்டு தூபா உட்பட பல தலைவர்கள் கைதாகி அங்கு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட பிறகு மன்னர் ஞானேந்திராவை மன்மோகன்சிங் சந்திப்பது இது தான் முதன் முறையாகும். இந்த சந்திப்பின் போது நேபாளத்தில் கைது செய்யப்பட்ட அரசியல் கட்சித் தலை வர்களை விடுதலை செய்து அங்கு மீண்டும் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தும்படி மன்னர் ஞானேந் திராவை மன்மோகன்சிங் கேட்டுக் கொண்டார்.

அதைப் படிப்படியாக செய்வதாக மன்னர் ஞானேந்திரா உறுதி அளித்தார் மாவோயிஸ் தீவிரவாதிகளை ஒழிக்க இந்தியா தொடர்ந்து ஆயுத உதவி அளிக்க வேண்டும் என்று மன்மோகன்சிங்கிடம் ஞானேந்திரா வேண்டுகோள் விடுத்தார் எனத் தெரிகிறது.

சிறிலங்கா பிரதமர் மகிந்தராஜ பக்ஷவையும் மன்மோகன்சிங் சந்தித்துப் பேசியுள்ளார். இதில் இலங்கை, இந்தியா இருநாடுகளும் சுனாமி போன்ற பேரழிவுகளை எதிர்கொள்ளும்போது இணைந்து செயல்படுவது என முடிவு காணப்பட்டதாக தெரிகிறது.

இது இவ்வாறிருக்க மாநாட்டில் உரையாற்றிய மன்மோகன்சிங் ஐக்கிய நாடுகள் சபையில் அதிக பிரதிநிதித்துவம் கேட்போம் எயிட்ஸ், தீவிரவாதம் போன்ற வற்றை ஒழிக்க ஒன்று சேருவோம் எனக் குறிப்பிட்டார்

# மார்க்சிய கம்யூனிஸ்ட் செயலர் கருணாநிதியை சந்தித்தார்



மார்க்சிய கம்யூனிஸட் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக பொறுப்பு ஏற்றபின் பிரகாஷ் கரத் முதன் முறையாக நேற்று முன்தினம் சென்னைக்குச் சென்றார். சென்னையில் அவர் கட்சியின் முக்கிய நிர்வாகிகள்,பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்தினார். முன்னதாக தமிழ் நாட்டில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவரான தி.மு.க தலைவர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பூங்கொத்து கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார். பின் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய பொதுச் செயலாளராகதேர்ந் தெடுக்கப்பட்டதற்காக பிரகாஷ் கரத்துக்கு கருணாநிதி வாழ்த்துக் கூறி பொன்னாடை போர்த்தினார். பின்னர் இருவரும் 30 நிமிடப்பேச்சு நடத்தினார்கள் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலை பற்றியும், தமிழ்நாட்டு அரசியல் நிலவரம் பற்றியும் அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

# திரிணாமுல் காங்கிரஸ் இரண்டு துண்டாகிறது?


மம்தா பானர்ஜி

மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ், பாரதிய ஜனதாவுடன் கூட்டணி சேர மூத்த தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அப்படி எதிர்ப்புத் தெரிவித்த சட்ட மன்ற உறுப்பினர்கள் இடை நிறுத்தம் செய்யப்பட்டனர். இதனால் கட்சி உடைகிறது.

மேற்கு வங்காள தலைநகர் கொல்கத்தாவில் மாநாகராட்சிக்குத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. கடந்த மக்களவைத் தேர்தலில் மேற்கு வங்காளத்தில் தே.ஜ.கூட்டணியில் சேர்ந்து மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் போட்டியிட்டது. இதனால் பலத்த தோல்வியைச் சந்தித்தது

நடக்கவிருக்கும் கொல்கத்தா மாநகராட்சி தேர்தலில் தே.ஜ.கூட்டணியில் இருந்து விலகி காங்கிரசுடன் கூட்டணி அமைத்து போட்டியிட வேண்டும் என்று திரிணாமுல் காங்கிரசில் ஒரு பிரிவுத் தலைவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். திரிணாமுல் காங்கிரசுடன் கூட்டணி அமைக்க காங்கிரசும் முன்வந்தது. ஆனால் அதை மம்தா பானர்ஜி நிராகரித்துவிட்டார்.

## 4 ஆம் ஆண்டு நினைவு தினமும் 21 ஆவது பிறந்த தினமும்



## 2 ஆம் லெப். அறிவமுதன்

(செல்வராசா நிர்மலன்)
தாயக மண்ணில்
25.04.2001
20,தருமபுரம்,பரந்தன்


ஆருயிர் செல்வமே! எம் தம்பி!
நீ சாகவில்லையடா, சரித்திரமாகியுள்ளாய்.
உன் சாதனைகள் சிற்பமாய் செதுக்கப்பட்டுள்ளது
நான்கு ஆண்டுகள் என்ன நாநூறு கோடி ஆண்டுகள்
சென்றாலும், நிர்மலமான எம் தம்பி நிர்மலனே
உன் நினைவுகள் எம்மை விட்டகலாது.

என்றும் உன் நினைவுடன்... 2 ஆம் லெப். அறிவமுதன் (குடும்பத்தினர்)

(6076)

## சாவு அறிவித்தல்

மலர்வு
03
12
1942



உதிர்வு
23
04
2005

### அமரர்.உயர்திரு.சொக்கலிங்கம் சாம்பசிவம்

தோணிக்கல் அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள்
ஆலய பரிபாலனசபையின் கௌரவ செயலாளர்


எழுவதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு முதலாம் பகுதியில் வசித்து வந்தவரும் தற்பொழுது சிவன் கோவில் வீதி, தோணிக்கல்,வவுனியாவில் வசித்து வருபவருமாகிய சொக்கலிங்கம் சாம்பசிவம் 23.04.2005 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம்-சிவக்கொழுந்துவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பர்வதம் ஆகியோரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் அன்புக்கணவரும், தர்மநாயகம், மனோன்மணி, நித்தியானந்த பூபதி, சறோஜினி, காலஞ்சென்ற கோகுலாம்பாள். சொர்ணலிங்கம், காலஞ்சென்ற கமலநாதன், கணேசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசீகரன் (சுரேஸ்-M.A.G (INGO) நர்மதா (சுவிஸ்) நிரஞ்சனா, கவிதா (கனடா),கலாவதனா ஆகியோரின் அன்புத்தந்தையும், கருணாகரன் (சுவிஸ்), சிவகுமாரன் (கனடா), பிரகாஸ்(கனடா) ஆகியோரின் மாமனாரும்,தனுசியா, தனுசன்,டினோசியா (சுவிஸ் )தவுசிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி.11814)

## காணவில்லை



கௌசிகா கார்த்திகா நீலவண்ணன்

முல்லைத்தீவு,கள்ளப்பாடு தீர்த்தக்கரையடியை வசிப்பிடமாகக் கொண்ட கந்தசாமி இராசையா ஆகிய எனது பிள்ளைகளான கார்த்திகா (வயது-14),கௌசிகா(வயது-11), நீலவண்ணன்(வயது-10) ஆகியோர் கடந்த மார்கழிமாதம் 26 ஆம்திகதி ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தத்தின்போது காணாமல் போய்விட்டனர். இவர்கள் பற்றி அறிந்தவர்கள் கீழ்க்குறிப்பிடும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இல.148 உண்ணாப்புலவு முகாம்,
முல்லைத்தீவு.

(5915)

தகவல்:-
இராசையா,தந்தை.

## சச்சினின் ஒவ்வொரு சாதனையும் எனது மகிழ்ச்சிக்குரியதே - லாறா




சச்சின் டெண்டுல்கரின் ஒவ்வொரு சாதனையும் எனக்கு மகிழ்ச்சியே. எனது நண்பரின் சாதனை என்ற அளவில் எனக்கு பெருமையும்கூட என்கிறார் பிரையன் லாறா. சாதனை என்று எடுத்தால் சச்சினே முன்னிலை வகிக்கிறாரே என்று செய்தியாளர்கள் லாறாவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் சாதனை வீரர்களில் பிரையன் லாறா முக்கியமானவர். மேற்கிந்தியத்தீவு அணியின் தலைவராக சாதிக்க முடியாவிட்டாலும், தனிப்பட்ட முறையில் அழுத்தமாக முத்திரை பதித்தவர். அணிக்குள் நிலவிய பிரச்சினைகள் காரணமாக தற்போது அவர் அணித் தலைவர் பதவியில் இல்லை.

ஆனாலும், ஆக்ரோஷ ஆட்டத்துக்கு குறைச்சல் இல்லை. பார்படோசில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக முதல் இனிங்சில் 176 ஓட்டம் குவித்து தனது திறமையை மீண்டும் நிரூபித்தார். எனது கிரிக்கெட் வாழ்வில் சிறிது காலம் தலைவராக இருந்தேன். இப்போது நான் துடுப்பாட்ட வீரர் மட்டுமே. ஒழுங்காக துடுப்பாடி ஓட்டங்களைக் குவிக்க வேண்டும் என்பது மட்டுமே இப்போது எனது எண்ணம்.

இதனைவிட அணிக்கு வெற்றி தேடிக் கொடுப்பதுடன் நான் சார்ந்த அணி எப்போதும் வெற்றிபெறவேண்டும். அந்த வெற்றியில் எனக்கும் பங்கிருக்க வேண்டும். இது மட்டுமே எனது இலக்கு. இதனை மனதில் கொண்டே ஒவ்வொரு போட்டியையும் அணுகின்றேன் என்றார்.

## சர்ச்சைக்குரிய பொண்டிங்கின் துடுப்பு அனுமதி வழங்கவில்லை என்கிறது ஐ.சி.சி.



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தலைவர் றிக்கி பொண்டிங் பயன்படுத்தும் புதிய துடுப்பு சர்ச்சையைக் கிளப்புகிறது. இந்த துடுப்பைப் பயன்படுத்தத் தடை விதிப்பது பற்றி ஐ.சி.சி. பரிசீலிக்கிறது.

கிரிக்கெட் வீரர்கள் பயன்படுத்தும் துடுப்பு எவ்வளவு நீளம், அகலம், கடினம் இருக்கலாம், எப்படித் தயாரிக்க வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை ஐ.சி.சி. விதிமுறை வகுத்து வைத்திருக்கிறது. இந்த விதிகளை மீறுகிறார் அவுஸ்திரேலிய கிரிக்கெட் தலைவர் றிக்கி பொண்டிங் அவருக்காக புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள துடுப்பில் இப்போது சர்ச்சையைக் கிளப்புகிறது. றிக்கி பொண்டிங் பயன்படுத்தும் புதிய துடுப்பில் கார்பன் கிராபைட் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால், துடுப்பாட்டம் செய்யும்போது, இன்னும் கூடுதல் சக்தியுடன் பந்தை அடித்து விளாச முடியும். ஐ.சி.சி. விதிமுறைகளை மீறி இந்த துடுப்புத் தயாரிக்கப்பட்டிருப்பதால் சர்ச்சை கிளம்பியது.

இதைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், உள்ளூர் போட்டிகளில் பொண்டிங் தொடர்ந்து பயன்படுத்தினார். புதிய ரக துடுப்பு பயன்படுத்த பொண்டிங்கிற்கு ஐ.சி.சி. அனுமதி வழங்கிவிட்டது என்று செய்திகள் வெளியாகின. இதை ஐ.சி.சி. தலைமை நிர்வாகி மால்கம் ஸ்பீட் நேற்று முன்தினம் திட்டவட்டமாக மறுத்தார். றிக்கி பொண்டிங்கிற்காக வடிவமைக்கப்பட்ட புதிய ரக துடுப்பு ஐ.சி.சி. விதிமுறைகளை மீறுவதாகவுள்ளது. அந்தத் துடுப்பை பயன்படுத்த நாங்கள் அனுமதி வழங்கவில்லை என்றார் ஸ்பீட்.

## துடுப்பாட்ட வலிமையை மீண்டும் நிரூபித்தார் கெவின் பீற்றர்சன்



இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் கெவின் பீற்றர்சன் மீண்டும் தனது துடுப்பாட்ட வலிமையை நிரூபித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெறும் கவுண்டி போட்டித் தொடரில் முன்னைய ஆட்டமொன்றில் தனது துடுப்பாட்டத் திறனை வெளிக்காட்ட முடியாதுபோன பீற்றர்சன் ஹம்சயர் சசெக்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் சசெக்ஸ் அணியின் வெற்றி ஓட்டங்களான 61 ஓட்டங்களை 51 பந்துகளில் பெற்றுக்கொடுத்தார். இதில் இரு சிக்சர்களும் அடங்கும்.

முன்னதாக ஹம்சயர் அணிக்காக பந்து வீசும் முஸ்டக் அகமது அடுத்தடுத்து சசெக்ஸ் அணியின் இரு விக்கெட்டுக்களை வீழ்த்தி ஹட்ரிக் சாதனை படைக்கவிருந்தபோது களமிறங்கிய கெவின் பீற்றர்சனும், சேன் எர்வின்னும் அவரது பந்துகளை விளாசினர். எனினும் 61 ஓட்டங்களுடன் பீற்றர்சன் ஆட்டமிழந்தார். இவர் தனது திறமையை வெளிக்காட்டி பங்களாதேஷ் அணியுடனான போட்டிகளில் பங்கேற்கும் இங்கிலாந்து அணியில் இடம்பிடிக்க எதிர்பார்த்துள்ளார்.


## பார்படோஸ் டெஸ்ட் கிரிக்கெட் தென்னாபிரிக்கா 521 ஓட்டம் குவிப்பு



பார்படோசில் நடைபெறும் தென்னாபிரிக்க மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவின் போது தென்னாபிரிக்க அணி எட்டு விக்கெட் இழப்புக்கு 521 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.




முதல் நாள் எண்ணிக்கையான 253 ஓட்டங்களுடன் ஆட்டத்தைத் தொடர்ந்த தென்னாபிரிக்கா டி வில்லியர்ஸ் பெற்றுக்கொண்ட 178 ஓட்டங்களும், ஜக்கலிஸ், டிப்பென்னர் முறையே 78,71 என்ற ஓட்டங்களுடனும் தென்னாபிரிக்கா வலுவான நிலையை எட்டியுள்ளது. அத்துடன் இரண்டாவது இன்னிங்சில் விரைவாக மேற்கிந்தியத் தீவுகளின் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினால் வெற்றி தமது பக்கம் திரும்பிவிடும் என 178 ஓட்டங்களைப் பெற்ற டி வில்லியர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.



பெடரேசன் கோப்பை மகளிர் டென்னிஸ் கால்இறுதியில் அமெரிக்கா-பெல்ஜியம் அணிகள் மோதின. இதில் கேலன்சுக்கு (பெல்ஜியம்) எதிரான ஆட்டத்தில் வீனஸ் வில்லியம்ஸ் பந்தை திருப்பி அனுப்ப போராடும் காட்சி. இதில் வீனஸ் 6-2, 6-2 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்றார்.




## கிளே கோர்ட் சம்பியன் டென்னிஸ் அன்டி ரொடிக் இறுதிக்கு முன்னேறினார்



ஹவுஸ்டனில் நடைபெறும் கிளே கோர்ட் சம்பியன் போட்டி டென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்துக்கு அமெரிக்க வீரர் அன்டிரொடிக் தெரிவாகியுள்ளார். நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் அவர் ஆஸ்திரியாவின் ஜர்ஜ் மில்ஸரை 6-4,6-2 என்ற செட் கணக்கில் வென்று இந்தத் தகுதியைப் பெற்றார்.

ஆரம்பத்தில் ரொடிக் ஆட்டம் பின் தங்கிக் காணப்பட்டாலும், இறுதி நேரத்தில் வெற்றி அவர் பக்கம் திரும்பியது. இரண்டு முறை இந்தத் தொடரைக் கைப்பற்றிய ரொடிக் செபஸ்டியன் குரோஸ் ஜீனை இறுதிப்போட்டியில் சந்திக்கவுள்ளார். இவர் இந்தத் தொடரின் காலிறுதியில் அன்ரு அகாஸியை வென்றதுடன் அரையிறுதியில் நிக்வோஸ் லபென்டியை 6-1, 7-6 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப்போட்டியில் பிரவேசித்துள்ளார்.

## தியாக தீபம் அன்னை பூபதி நினைவாக மின்னொளியில் நடைபெற்ற கரப்பந்துப் போட்டி

மல்லாவி அனிஞ்சியன் குளம் பகுதியில் தியாக தீபம் அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மின்னொளி கரப்பந்தாட்ட நிகழ்வுகள் துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் அனிஞ்சியன்குளம் வாணி விளையாட்டுக் கழகத் தினரால் கடந்த 18ஆம் திகதி அன்று மாலை 5.45 மணிக்கு வாணி விளையாட்டுக் கழகத்தலைவர் க.மோகனதாசன் தலைமையில் இடம் பெற்றது.




இந் நிகழ்வில் அரை இறுதி போட்டிக்கு மல் லாவி மத்தி A அணியும், பாலிநகர் ஸ்கைலாப் அணியும் மறு சுற்றில் திருநகர் கலைவாணி அணியும், செல்வபுரம் கலைமகள் அணியும் பங்குபற்றின. இறுதிச் சுற்றுக்குத் தெரிவான அணிகளில் மல்லாவி மத்தி விளையாட்டுக்கழக A அணியும், செல்வபுரம் கலைமகள் அணியும் போட்டியிட்டன. இதில் செல்வபுரம் கலைமகள் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும் மல்லாவி மத்தி விளையாட்டு கழகம் இரண்டாம் இடத்தையும் பெற் றுக்கொண்டன. வெற்றி பெற்ற விளையாட்டுக்கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணங்கள், வெற்றிக் கேடயங்கள் அன்னை பூபதியின் இறுதி நாள் நிகழ்வில் துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கா.செல்வன் அவர்களினால் வழங்கப்பட்டது. (24)

## உபகரணங்கள் வழங்கல்



பாண்டியன்குளம் துணுக்காய்ப் பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் நிகழ்வு துணுக்காய் அரசியல்துறைச் செயலகத்தில் கடந்த 21 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கா.செல்வன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட விளையாட்டு துறைப் பொறுப்பாளர் மா.காளி அவர்களால் நான்கு விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டது. இது போன்று பாண்டியன்குளம் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கும் வழங்கப்பட்டன. (24)



### சிந்தனைக்கு

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட வேண்டும்; அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 25-04-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## எதிலும் தெளிவில்லை!

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசாங்கத்திடம் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான தெளிவான கொள்கையில்லை இது எதிர்க்கட்சிகளினால் மட்டும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு அல்ல. சர்வதேச சமூகத்தினாலும் பெரும்பாலும் உணரப்பட்ட விடயமாகவே இது உள்ளது. இது குறித்து அவர்கள் தமது கருத்துக்களையும் தெரிவிக்கத் தொடங்கிவிட்டனர் என்றே கூறலாம்.

எடுத்துக்காட்டாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்கப்பிரதி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா இனப்பிரச்சினை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து தெரிவித்துள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும். "சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக சிறிலங்கா அரசிடம் தெளிவான நிலைப்பாடு இன்றி சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது சிரமம்'' எனத் தெரிவித்திருந்தார்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு; சுனாமி பேரழிவிற்குப் பொதுக்கட்டமைப்பு மூலமான நிவாரண மற்றும் மீள்கட்டமைப்பு, இவை இரண்டிலுமே அரசாங்கம் உறுதியற்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதும் நேரத்திற்கு ஒருமாதிரி பேசுகிறது என்பதும் சிறிலங்கா ஆட்சியாளர்களின் அண்மைய நடவடிக்கைகளை அவதானிக்கும் எவரும் இலகுவாகவே புரிந்துகொள்ளத்தக்கதொன்று.

அரசாங்கத்தின் இத்தகைய நிலைப்பாடானது இனப்பிரச்சினைக்கான தீர்வு சுனாமி அனர்த்த மீள்கட்டுமானப்பணிகள் என்பனவற்றின் எதிர்காலம் குறித்து கேள்விகளை எழுப்புபவையாக உள்ளன. ஏனெனில் மக்கள் சமாதான முயற்சிகளிலும், மீள்கட்டுமானப்பணிகளிலும் நம்பிக்கை கொள்ளமுடியாத அவலநிலையைத் தோற்றுவிப்பதாகியுள்ளது.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கம் இனப்பிரச்சினை, சுனாமி அனர்த்த மீள் கட்டுமானம் தொடர்பான தமிழ் மக்களுடன் நேரடியாகச் சம்பந்தப்படும் பிரச்சினைகளில் மட்டுமல்ல, பொதுவிலேயே கொள்கை எதையும் கொண்டதொரு அரசாங்கமாகக் காணப்படவில்லை. இதற்கான ஆதாரங்கள் நிரம்பவே காணப்படுபவையாகவுமுள்ளன.

எடுத்துக்காட்டாக நாட்டின் முதுகெலும்பாகவுள்ள பொருளாதாரக்கொள்கை குறித்தும் அரசாங்கத்திடம் தெளிவான கொள்கையோ, கோட்பாடோ இல்லை. இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் இன்று பெரும் கேள்விக்குரிதாகியுள்ளது. 2003 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சிவீதம் 2004 இல் வீழ்ச்சி யடைந்தமைக்கு இத்தகைய கொள்கையற்ற போக்குக்கும் காரணமாகும்.

சந்திரிகா குமாரதுங்க 1994இல் ஆட்சி அதிகாரத்திற்கு வரும் முன்னர் திறந்தபொருளாதாரக் கொள்கை, தனியார் மயமாக்கல் என்பன குறித்து சில விமர்சனங்களைக் கொண்டவராக இருந்தார். சற்றுவேறுவிதமாகக்கூறுவதானால் சிறிது இடது சாரிகள் சாயம் பூசிக்கொண்டிருந்தார். ஆயினும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் அவர் திறந்த பொருளாதாரக் கொள்கை -தனியார் மயமாக்கல் என்பனவற்றிற்குள் முழுமையாக உள்வாங்கப்பட்டவராகவே மாறிவிட்டார்.

இந்நிலையானது அவரது பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் முழு அளவில் ஏற்புடைய தொன்றாகியது. ஆனால், கடந்த ஆண்டு தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியைத் தனது கூட்டணியாக - பங்குதாரர்களாக கொண்ட ஜே.வி.பி.யினர் அத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக இருக்கவில்லை.

ஜே.வி.பி.யும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஓராண்டுகளுக்கு மேலாக பேச்சுவார்த்தை நடத்தி ஓர் இணக்கப் பாட்டிற்கு வந்தபின்னரே தேர்தலை எதிர்கொண்டனர் எனினும், அவர்கள் ஆட்சி அதிகாரத்தை எவ்வாறு பங்கு போட்டுக் கொள்ளுதல் - அதாவது தேர்தல் தொகுதி பங்கீடு, அமைச்சுக்கள் ஒதுக்கீடு என்பனவற்றில் இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தார்களே ஒழிய நாட்டின் முக்கிய பிரச்சினைகளான இனப்பிரச்சினை, பொருளாதாரப்பிரச்சினை கொள்கை என்பனவற்றில் இணக்கப்பாடு எதற்கும் வந்ததாக இல்லை.

இந்நிலையில் ஆட்சிக்கு வந்த பின்னர் தற்பொழுது இனப்பிரச்சினை மட்டுமல்ல பொருளாதாரப்பிரச்சினைகள் தொடர்பாகவும் இருதரப்பும் வெளிப்படையாக முரண்பட்டுக் கொள்ளும் நிலையே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயமாக்கல் மின்சாரசபையைக் தனியார் மயமாக்குதல் போன்ற விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் முரண்பட்டுக் கொண்டிருப்பதை சுட்டிக்காட்ட முடியும்

இத்தகைய நிலையில் தற்பொழுது ஆளும்கூட்டணிக்குள் முரண்பட்டு நிற்கும் ஜே.வி.பி. சில எச்சரிக்கும் நடவடிக்கைகளைத் செய்யத்தீர்மானித்துள்ளது போல் தெரிகின்றது. இதன் வெளிப்பாடே மேல் மாகாணசபை முதலமைச்சர் மீது ஐ.தே.கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதுபோன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளமையாகும்.

அதாவது ஜே.வி.பியின் இன்றைய அரசியல்கொள்கையானது ஆளும் கட்சியை அச்சுறுத்தி ஆட்சிஅதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதே ஆகும். இதற்கு அப்பால் இனப்பிரச்சினை குறித்தோ, சுனாமி அனர்த்தம் குறித்தோ அக்கறையோ அவதானமோ இல்லை. ஆனால் இவர்களின் நடவடிக்கைகளால் பொருளாதார ரீதியில் ஏற்படும் இழப்புக்கள் நெருக்கடிகள் என்பனவற்றை மக்கள் தான் தாங்கிக்கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இவர்களைப் பாராளுமன்றம் அனுப்பியர்கள் அவர்களே.

# சுனாமிபொதுக்கட்டமைப்பின் மூலம் அரசு - புலிகள் பரஸ்பர நம்பிக்கை ஏற்படும்

### —பிரதியமைச்சர் டிலான்பெரேரா

(கொழும்பு)

சுனாமி பொதுக் கட்டமைப்பை சமாதான பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப கட்டமாக்கிக்கொள்வதே அரசின் நோக்கம். இக்கட்டமைப்பின் மூலம் புலிகளுக்கும் அரசிற்குமிடையில் பரஸ்பர நம்பிக்கை ஏற்படுமென துறைமுக சிவில் விமான சேவைகள் பிரதியமைச்சர் டிலான்பெரேரா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரை தெளிவுபடுத்துவதற்கான "சமாதானத்திற்கு எதிரான சவால்'' என்ற தலைப்பில் கண்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துதெரிவிக்கையில்; இக்கட்டமைப்பு நிர்வாகத்தை உருவாக்குவதற்கு சமமானது. எமது பொதுச் செயலாளரும், ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளரும் டில்வின்சில்வாவும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினை தீர்விற்கு அதிகாரத்தை பரவலாக்க விரும்புகின்றது. மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிர்ப்புத்தெரிவிக்கின்றது. எனினும் நிர்வாகத்தை பரவலாக்குவதில் அவர்களுக்கு விருப்பம் உள்ளது.

பெரும்பான்மை கருத்து ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். பெரும்பான்மை இன்னும் எம்மிடமே உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் 69 பேர் எம்மிடம் உள்ளனர். 39பேர் ஜே.வி.பி.யினரிடம் உள்ளனர். இங்கு அதிகாரம் பரவலாக்கப்படமாட்டாது. நிர்வாகம் பரவலாக்கப்படும். இதனால் ஜே.வி.பி. விரும்பக்கூடும் ஒருங்கிணைந்த பொதுக்கட்டமைப்பின் மூலம் நாம் இரண்டு மூன்று நான்கு தரப்புகள் ஒன்றாக வேலைசெய்யும் போது ஏற்படும் பரஸ்பரநம்பிக்கையை சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான முதற்கட்டமாக பயன்படுத்திக் கொள்ள முடியுமென மேலும் தெரிவித்துள்ளார்.

# உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு காலியில் நடத்தப்படவேண்டும்

### —எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க

(கொழும்பு)

இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை காலியில் நடத்தவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இம் மாநாட்டினை சுனாமியினால் பாதிக்கப்பட்ட காலி மாவட்டத்தில் நடத்துவதன் மூலம் கூடுதலான நிதியுதவியை பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனை கண்டியில் நடத்துவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சி பயனற்றதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். காலி மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்தவேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# மேல் மாகாண முதலமைச்சர் இராஜிநாமா செய்யத்தீர்மானம்

(கொழும்பு)

மேல் மாகாண சபை முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே தமது பதவியை இராஜிநாமா செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை அவருக்கு எதிராக மாகாண சபையில் ஐக்கிய தேசிய கட்சியினால் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஜே.வி.பி யும் ஆதரவளிக்கும் என்ற கருத்து வலுத்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை கூடிய ஜே.வி.பி யின் மேல்மாகாண சபை உறுப்பினர்கள் பிரேரணைக்கான தமது நிலையை உறுதிப்படுத்தினர் இந்த நிலையிலேயே முதலமைச்சர் பதவி விலகலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அனல் மின் நிலையம் அமைப்பதற்கு எதிராக நேற்றும் ஆர்ப்பாட்டம்

நுரைச்சோலை அனல் மின் நிலையம் அமைப்பதற்கு எதிராக நேற்றும் புத்தளம் மாம்புரியில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் பெருமளவானோர் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தத் திட்டத்தை ஆட்சேபித்து நுரைச்சோலைப் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதேவேளை அனல் மின் நிலையம் அமைக்கும் நடவடிக்கை தொடரின் மேலும் பல போராட்டங்கள் இடம்பெறலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச கணக்காய்வு நிறுவனம் மீது சட்டமா அதிபர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச கணக்காய்வு நிறுவனமான பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் மீது இலங்கையின் சட்டமா அதிபர் குற்றம் சுமத்தியுள்ளார். குறிப்பிட்ட நிறுவனம் கடந்த காலத்தில் மேற்கொண்ட தனியார் மயப் பணிகளில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக இந்தக் குற்றச் சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இதனை விசாரணை செய்யவென ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட விசாரணைக்குழு எதிர்வரும் வாரத்தில் இலங்கை வரவுள்ளது. பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் கணக்காய்வு நிறுவனம் சுனாமி நிதி தொடர்பில் இலங்கையில் கணக்காய்வுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள நிறுவனமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையைத் தாக்கும் சுனாமி அலைகள் உருவாகும் வாய்ப்பு உள்ளதாம்

(கொழும்பு)

இலங்கையைப் பாதிக்கும் வகையிலான சுனாமி அலைகள் இந்தோனேசியா சுமாத்திராவிலும், ஈரானின் மெக்ரன் பிரதேசத்திலுமே உருவாகும் வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது அண்மையில் நடைபெற்ற சர்வதேச மாநாடு ஒன்றின் போது இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் குறிப்பிட்ட இடங்களில் புவியதிர்வுகள் ஏற்படுமாக இருந்ததால் அதன் மூலம் இலங்கைக்கு சுனாமி அலைகள் தள்ளப்படக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது

# முதலமைச்சர் நம்பிக்கையில்லா தீர்மானம் ஜே.வி.பி. கடும் போக்கை கடைப்பிடிக்கும்

(கொழும்பு)

மேல் மாகாண சபை முதலமைச்சர் ரெஜினோல்ட்கூரேவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது தமது கட்சி கடும் போக்கைக் கடைப்பிடிக்கவுள்ளதாக ஜே.வி.பி யின் மேல் மாகாண சபை குழுத் தலைவர் வறுன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து தம் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவிருப்பதாக முதலமைச்சர் ரெஜினோல்ட் தெரிவித்திருந்த தாகவும் இந்தக் கருத்துக்களைய டுத்தே தாம் இவ்வாறான நிலைப்பாடு தொடர்பில் அறிவிக்க வேண்டி ஏற்பட்டதாகவும் ஜே.வி.பியின் மேல் மாகாண சபை குழுத் தலைவர் வறுன ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னதாக ஜே.வி.பியினர் விசேட கூட்டமொன்றை நடாத்தவுள்ளதாகவும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் ஜே.வி.பியின் மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சர் தொடர்பில் கடுமையான தீர்மானமொன்றை எடுக்கலாமெனவும் ஜே.வி.பியின் மேல் மாகாண சபைக் குழுத் தலைவர் வறுன ராஜபக்ஷ தகவல் வெளியிட்டுள்ளார்.

-பலாலி விமானத்தள விஸ்தரிப்புக்கு உதவி

# இந்தியப் பிரதமரின் விளக்கம்

# வைகோவினால் நிராகரிப்பு

(சென்னை)

பலாலி விமானத்தளத்தின் புனரமைப்புப் பணிகளில் இந்தியா ஈடுபடாமல் தவிர்ப்பதன் மூலம் பாகிஸ்தான் அல்லது சீனா போன்ற நாடுகள் அந்தப் பணியை மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகுமெனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ நிராகரித்துள்ளார்.

இலங்கை விடயத்தில் இந்திய இராணுவ ஒத்துழைப்பு எதனையும் வழங்கக் கூடாது என வைகோ இந்தியப் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது இலங்கை இந்தியப் பாதுகாகப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் உருவாக்கப்பட மாட்டாது என உறுதியளித்துள்ள இந்தியப் பிரதமர் பலாலி விமானத் தளத்தின் புனரமைப்பின் அவசியம் குறித்து வைகோவிற்கு விளக்கியுள்ளார்.

அதன் போது சீனா அல்லது பாகிஸ்தான் இந்த விமானத் தளத்தை புனரமைப்புச் செய்யுமாயின் அது இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக அமையுமென இந்தியப் பிரதமர் சுட்டிக்காட்டியதாகவும் இதற்குப் பதிலளித்த வைகோ சீனாவும் பாகிஸ்தானும் இந்தியாவுடன் தமது எல்லைகளை கொண்டுள்ளதைச் சுட்டிக்காட்டியதுடன் எல்லையின் ஊடாக விடுக்கப்படாத எச்சரிக்கையினை இலங்கையிலிருந்து இந்த நாடுகள் விடுக்கும் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத வாதம் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை இந்திய இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தம் தாமதமடைவதற்கு இந்தியாவே காரணமென இலங்கையின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். ஒப்பந்தத்தில் கைச்சாத்திடு வதற்கு இலங்கை தயாராக இருப்பதாக குறிப்பிட்ட அமைச்சர் இந்தியத் தரப்பினாலேயே தமாதம் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜெயரட்ணத்தைத் தேடும் பணிக்கு சர்வதேச உதவி கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ள சிறிலங்கா சிரேஷ்ட பொலிஸ் புலனாய்வு அதிகாரி ஜெயரட்ணத்தை தேடும் நடவடிக்கைக்கு சர்வதேச உதவிகள் கோரப்பட்டுள்ளன.

இங்கிலாந்தில் இருந்து வந்த ஒருவருடன் இரவு விருந்து ஒன்றிற்கு ஜெயரட்ணம் சென்றுள்தாகவும் அவரே இந்தக் கடத்தல் சம்பவத்தின் சூத்திரதாரியாக இருக்க வேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஜெயரட்ணத்தை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்தாகக் குறிப்பிட்டுள்ள அவர் சிறிலங்காவிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் இந்தப் பணியில் முனைப்புடன் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (32)

## தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை மே மாதம் முதல் வாரத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் மே மாதம் இரண்டாம் திகதி முதல் நான்காம் திகதி வரை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையிலும் முல்லை.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு ஐந்தாம், ஆறாம் திகதிகளில் முல்லை.வலயக்கல்விப் பணிமனையிலும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பெற்றுள்ள தொண்டர் ஆசிரியர்களின் பெயர்விபரங்களை அந்தந்தக் கல்விப் பணிமனையில் பார்வையிடலாமெனவும் மற்றும் நேர்முகப்பரீட்சைக் குத் தெரிவு செய்யப்பெற்றவர்களுடைய விபரங்கள் தனித்தனியாக உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதெனவும் கிளி. முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ)

## தேசிய அனர்த்தம் தொடர்பான பாராளுமன்ற குழுக்கூட்டம்

(கொழும்பு)

தேசிய அனர்த்தம் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு இன்று கூடவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இன்று நடைபெறவுள்ள கூட்டத்திற்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க,

கடற்கோள் அனர்த்தத்தின் பின்னரான அவர்களின் அனுபவங்கள், நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தின்போது அரசசார்பற்ற நிறுவனங்களின் நிவாரணப் பணிகள் தொடர்பாகவும் மற்றும் நிதி தொடர்பான விடயங்கள் குறித்தும் ஆராயவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி கடற்கோள் அனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளின் அரசாங்க அதிபர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க,

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளருக்கும் அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிளிநொச்சியில் 1000 வீடுகள் அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆயிரம் வீடுகளை அமைத்துக்கொடுக்க இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் தீர்மானித்துள்ளது. இத்தகவலை கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயலர் க.கணேஷ் வெளியிட்டார். இவருடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது அவர் மேலும் தெரிவிக்கையில்; கிளிநொச்சி மாவட்ட கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளைப்பிரதேச செயலர் பிரிவுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளதெனவும் ஒவ்வொரு வீடும் 500 சதுர அடிகொண்ட ஐந்து இலட்சம் ரூபாசெலவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதெனவும் இதற்கான ஆலோசனைக்கூட்டம் அண்மையில் கிளிநொச்சி திட்டமிடல் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளதெனவும் தெரிவித்தார். (சோ)

## சேவை நலன் பாராட்டுவிழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கள்ளப்பாடு கிராம அலுவலர் சேந்தனுக்கு சேவை நலன் பாராட்டு விழா உண்ணாப்புலப் பகுதியில் அமைந்துள்ள கள்ளப்பாடு கிராமத்தின் தற்காலிக குடியிருப்பில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்றது.

சேவை நலன் பாராட்டுக் கேடயத்தை கடற்புலிகளின் சுனாமிப் புனரமைப்புப் பொறுப்பாளர் ப.தினேஷ் கிராம அலுவலருக்கு வழங்கி கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து கள்ளப்பாட்டு மக்களின் அன்பளிப்பினை கிராம அலுவலர் அந்தோனிப்பிள்ளை, விக்னேஸ்வரன் ஆகியோர் வழங்கினார்கள். (20)

## மலையகத்தில் மஞ்சள் மழை

மலையகப் பிரதேசமான அக்கரபத்தனையில் நேற்றும் மஞ்சள் நிற மழை பெய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டு நாட்களுக்கு முன்னரும் அங்கு மஞ்சள் நிற மழை பெய்தது இதேவேளை இந்த மழை பெய்து அடுத்தநாள் இலைகளில் ஓட்டைகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இது அமில மழையாக இருக்கலாமா என்பது தொடர்பில் ஆராய அங்கு புவியியல் மைய ஆய்வாளர்கள் விரைந்துள்ளனர்.

### எச்சரிக்கை

பாதாள உலகத்தினருடன் தொடர்புகளைக் கொண்டுள்ள பொலிசாருக்கு எதிராக கடும் தண்டனை வழங்கப்படுமென பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ எச்சரித்துள்ளார்

அண்மையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் போதைவஸ்து வியாபாரி ஒருவருடன் தொடர்பு கொண்டிருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்

இதனை அடுத்தே இந்த எச்சரிக்கை பொலிஸ் மா அதிபரால் விடுக்கப்பட்டுள்ளது. (32)

### ஜே.வி.பி....

முன்னணி அரசாங்கத்திலிருந்து வெளியேறப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சனாதிபதியினால் இக்கடிதம் மக்கள் விடுதலை முன்னணிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பில்...

பக்தர்கள் என தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவில் முன்னர் செயற்பட்டு வந்த மதி, பின்னர் மத்திய கிழக்கு நாடொன்றிற்கு சென்று தொழில் புரிந்து வந்தார். ஒரு வருடத்திற்கு முன்னர் தான் நாடு திரும்பியிருந்தார். அண்மையில் ஆழிப்பேரலை நிவாரண மோசடிகளில் ஈடுபட்டமைக்காக இவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். சுவாமி ஊர்வலத்துடன் சென்ற இவரை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், தெரியவருகின்றது.

### பொதுக்கட்டமைப்பு...

ஐக்கிய முன்னணியின் முதன்மை வேட்பாளராக சனாதிபதி போட்டியிடக் கூடும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

சனாதிபதி தலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணி போட்டியிடும் பட்சத்தில் கூடுதல் ஆசனங்களை கைப்பற்ற முடியும் என்பதுடன் ஜே.வி.பியினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் செல்வாக்கினை குறைக்க முடியும் என்றும் சனாதிபதி தரப்பு கருதுவதாகத் தெரியவந்துள்ளது. (32)

### விடுதலைப்புலிகளின்...

யாட்டு நிகழ்வுகளும், கலை இலக் கியப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

விளையாட்டு நிகழ்வுகளில் மரதன் ஓட்டப் போட்டிகள் பளைப் பகுதியில் நடைபெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை பெண் போராளிகளுக்கான விளையாட்டு நிகழ்வின் ஒரு கட்டமாக பத்துக்கிலோமீற்றர் மரதன் ஓட்ட நிகழ்வு புதுக்காட்டுச் சந்தியில் ஆரம்பமாகி முகமாலை வரை இடம் பெற்றது. இப் போட்டியின் போது பெண்போராளிகள் கனரக ஆயுதங்களைத் தாங்கியவாறு ஓடிச்சென்றனர்.

இதே போன்று நேற்று சமரணிகளின் ஆண் போராளிகளுக்கான மரதனோட்ட நிகழ்வு காலை 5.45 மணியளவில் இயக்கச்சிப் பகுதியிலிருந்து ஆயுதங்களைத் தாங்கியவாறு ஓர் அணியும், பளை புதுக்காட்டுச்சந்தியிலிருந்து கனரக ஆயுதங்களைத் தாங்கிய மற்றுமோர் அணியும் பங்குபற்றின. இவ்வணிகளின் போட்டிகளை கேணல் ஜெயம் தூக்கி வேட்டுக்களைத் தீர்த்து ஆரம்பித்து வைக்க முகமாலையின் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி எல்லைவரை சென்று போட்டி முடிவுற்றது. வடபோர் முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், கேணல் ஜெயம் மற்றும் தளபதிகள், போராளிகள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டு போராளிகளை உற்சாகப்படுத்தினர்.

இதேவேளை இவ்வெற்றி விழாவை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் சமரணிகளுக்கிடையே கலை இலக்கியப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. விடுதலைப் புலிகளின் போர்ப்பயிற்சிப் பாசறையில் நடைபெற்று வரும் இப்போட்டிகளில் போராளிகளின் கவியரங்குகள், நடன, நாடக நிகழ்வுகள் மற்றும் கலை இலக்கியப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகளில் போராளிகள் உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் பங்குபற்றி வருகின்றனர். அத்தோடு எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள வெற்றிவிழாவின் போது மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்ற போராளிகளுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச,தீ)

### சுனாமி நிவாரண...

படவில்லையெனத் தெரிவித்துள்ள ஐக்கியதேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்.

உலக வங்கி போன்ற நிறுவனங்கள் இடம் பெயர்ந்தவர்களுக்காக வழங்கியுள்ள நிதியைப்பயன்படுத்தி தலா நான்கு இலட்சம் ரூபாய் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை மட்டுமே வீட்டு வசதிகளுக்கான நிதியாக அரசாங்கம் வழங்குவதாகவும் அதுவும் அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்படவில்லையெனவும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

### சுனாமி...

இதேவேளை, பொதுக் கட்டமைப்பு அமைக்கப்படாவிட்டால் சுனாமியின் பின்னரான புனர் அமைப்புகளுக்காக சர்வதேசத்தின் நேரடி உதவிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வதை எவராலும் தடுக்க முடியாது என நீதிஅமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார். நேற்று வாரியபொலவில் நடைபெற்ற பொதுக்கட்டமைப்பு தெளிவாக்கல் நிகழ்வின் போது உரையாற்றிய அவர், சுனாமிக்கு பின்னரான புனரமைப்புகளுக்காக பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவது அவசியமாகும் இதனை தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் நாட்டில் பாரிய பிரச்சினைகள் ஏற்படுவதை தடுக்க முடியாமல் போய்விடும். வடக்கு கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் அரசாங்க நிர்வாகம் இயங்கவில்லை. எனவே அங்கு சுனாமியின் பின்னரான புனர்அமைப்புக்களை மேற்கொள்வது சாத்தியமில்லை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டியது அவசியமானதாகும். அதன் மூலமே சர்வதேசத்தின் உதவியை இலங்கையால் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது